# வெற்றிமுனை

பன்னாட்டுத் தமிழியல் மேம்பாட்டு மாத இதழ்

தனி இதழ் : ரூ. 20/- ISSN - 2394 - 2438

அன்பு நிறைந்த அறிவைத் தேடி ஒரு பயணம்

மலர் - 05 ஜூலை - 2017 இதழ் - 03



சிறப்பாசிரியர்
**நீதியரசர் ச. மோகன்**
(உச்சநீதிமன்ற மேனாள் நீதியரசர்)

முதன்மை ஆசிரியர்
**நீதிபதி மூ. புகழேந்தி**

ஆசிரியர்
**முனைவர் மோ. பாட்டழகன்**
93804 17307

பொறுப்பாசிரியர்
**பேரா. திருமதி. சோதிலட்சுமி**

துணை ஆசிரியர்கள்
**பேராசிரியர் சு. முத்தையா**
**அருண்குமார் ஞானவேலு**
**கவிஞர் திருவைபாபு**
**இர. மகேந்திரன்**
**கவிஞர் உமர் கத்தாபு**
**சு. அனிதா பரமசிவம்,**
*எம்.ஏ., பி.எட்., எம்.ஃபில்*
**கவிஞர் செந்தாமரைக்கொடி**

வடிவமைப்பு:
**மயிலை முத்துக்கள்**
**9840924995**

## ஆலோசனைக் குழு

முனைவர் மருதூர் அரங்கராசன்
முனைவர் இனியன் கோவிந்தராஜீ, கரூர்
முனைவர் சி. கோமளவல்லி
பேராசிரியர் எம். கோவிந்தன்
இரா. கௌதமராஜன்
திருமதி. விசயலட்சுமி மாசிலாமணி
முனைவர் மோ.ஐ. மகேஸ்வரி


இதழின் வெற்றிப் பயணத்தில் புரவலராக... வாழ்நாள் உறுப்பினராக இணைந்து ஆதரவு தாருங்கள்

| | | |
|---|---|---|
| புரவலர் கட்டணம் | : | ரூ. 10,000/- |
| வாழ்நாள் உறுப்பினர் கட்டணம் | : | ரூ. 5,000/- |
| 5 ஆண்டுச் சந்தா | : | ரூ. 1,000/- |
| 3 ஆண்டுச் சந்தா | : | ரூ. 700/- |
| 1 ஆண்டுச் சந்தா | : | ரூ. 240/- |

**மின்னஞ்சல் மூலமும் படைப்புகளை அனுப்பலாம்**

**vasantha.tha399@gmail.com**


இதழின் அனைத்துத் தொடர்புகளுக்கும் படைப்புகள் மற்றும் கருத்துரைகளை அனுப்ப வேண்டிய முகவரி


ஆசிரியர், ‘வெற்றிமுனை’
**26, குறுக்குத் தெரு, ஜோசப் காலனி, ஆதம்பாக்கம், சென்னை – 600 088**
93804 17307



# சங்குகளின் முழக்கம்

“மெய்ப்பொருள் காண்பதறிவு” என்ற தலைப்பில் நீதியரசர் தந்துள்ள கருத்துரைகள் வளமான வாழ்வுக்கு வழிகாட்டும் என்பதில் சிறிதும் ஐயமில்லை.

**மா. சூரியமூர்த்தி, வேலூர்.**

இனியன் கோவிந்தராஜு அவர்களின் உயிரைக் குடிக்கும் உப்பு என்ற கட்டுரை. அறிவியல் பூர்வமாக சமூக விழிப்புணர்வுச் செய்தியை வெளிப்படுத்தியுள்ளது. கட்டிடக்கலை, கல்வெட்டுக்கள், உணவியல் தொடர்பான அனைத்து படைப்புகளும் அருமை. நல்ல தரமான இதழாக ‘வெற்றிமுனை’ வெளிவருவதைக் கண்டு மகிழ்கிறேன்.

**வி. ஜெயகுமார், காஞ்சிபுரம்.**

முத்தமிழ்க் கவிஞரின் இரங்கல் கவிதை படிக்கும் அனைவருடைய கண்களையும் குளமாக்குகின்றன. வளையாபதியை இழந்து வாடும் பெற்றோர்களுக்கு எங்கள் ஆறுதலைத் தெரிவிக்கின்றோம்.

**அ. கௌதமன், சேலம்.**

வெற்றித் திருமகனாக உயர்ந்திருக்கும் உழைப்பின் சிகரம் முனைவர் அ. கோவிந்தராஜன் அவர்களுக்கு நெஞ்சம் நிறைந்த வாழ்த்துகளை மாலையாக்கி அணிவிக்கிறோம். மேலும், அவர் பல வெற்றிமுனைகளைத் தொட வேண்டும்.

**முத்து. மாணிக்கம், மதுராந்தகம்.**


இரண்டாவது உலகத் தமிழ் எழுத்தாளர்கள் மாநாடு நடந்த செய்தியே வெளியே தெரியவில்லை. உங்கள் இதழ் சிறப்பாக மாநாட்டுச் செய்திகளைப் பதிவு செய்துள்ளது. மாநாட்டில் பங்கேற்க முடியாத குறையை நீக்கும் வகையில் கவிஞர் உமர்கத்தாபு செய்திகளைத் தொகுத்தளித்திருப்பது பாராட்டுக்குரியது.

**க. சிவகாமி, அரக்கோணம்.**

பெற்றோரைப் போற்றிடுவோம் பெருமையுடன் வாழ்ந்திடுவாம்
கற்றோரை நாடிடுவோம் கலையெல்லாம் மாந்திடுவோம்
வெற்றிமுனை எய்திடுவோம் விண்தொட்டுப் பார்த்திடுவோம்
குற்றமில்லா வாழ்வாலே குவலயத்தைக் காத்திடுவோம்.

– நீதிபதி மூ. புகழேந்தி

# எதிர்ப்பின் விளைவுகள்



“எதிர்ப்பு” – இதுவொரு மந்திரச் சொல்

சிந்தித்துப் பாருங்கள். என் கூற்று உண்மையெனப் புரியும்.

இதைக்கண்டு அஞ்சி ஓடுவது ஒருவகை மனிதர்கள்

இதைச் சவாலாக ஏற்றுக் கொண்டு படிக்கற்களாக்கிச் சாதித்து முன்னேற முனைபவர்கள் மற்றொரு வகை மனிதர்கள். இவர்களுக்கு எதிர்ப்புகள் இல்லையென்றால் வாழ்க்கை சப்பிட்டதாக ஆகிவிடும். இவர்களுக்கு எதிர்ப்புகள் தான் உரம் – ஊக்கம் – உணர்வுகள் எல்லாமும் ஆகும்.

இந்த எதிர்ப்புகள் நம்மைத் தேடியும் வருவதுண்டு. சில நம்மாலும் ஏற்படுவதுண்டு. அதைக்கண்டு பயந்தோமேயானால் நம் மனமும் உடலும் சோர்ந்து விடும். உணர்வுகள் அற்று விடும். நடக்கக் கூடத் தெம்பில்லாதவர்களாகி விடுவோம்.

ஏசு மகானுக்கு இல்லாத எதிர்ப்பா? அப்பப்பா! சொல்லி மாளாது. அவர் எவரையும் பகைவராகக் கருதியதே இல்லை. அவரைப் பகைவராகக் கருதியவர்கள் அவருக்கு என்ன வெல்லாம் ஊறு செய்தார்கள்! ஆனால் அதையெல்லாம் கடந்த அவரை சிலுவை ஏற்றியவர்களுக்காக, ‘இவர்கள் என்ன செய்கிறோம் எனத் தெரியாமல் செய்கிறார்கள். இவர்களை மன்னித்தருளும்,’ என்று இறைவனிடம் வேண்டினாரே அது எதை காட்டுகின்றது? அது அவருடைய பரந்து பட்ட மன்னிக்கும் குணத்தை யல்லவாக் காட்டுகின்றது. அந்த மன்னிப்பும் எதிர்ப்பின்

அடிப்படையில் ஏற்பட்டது தானே! அந்த எதிர்ப்புதான் ஏசுபிரானை ஏற்றத்திற்கே இட்டுச்சென்றது.

காந்திமகான் சுடப்பட்டதும் கூட கடுமையான எதிர்ப் புணர்வாலே தானே! இல்லை யென்றால் அந்த உத்தமரை நாம் இழந்திருக்க மாட்டோம். ஆங்கிலேயர்களின் ஆதிக் கத்தை அந்த உத்தமத் தலைவர் எதிர்த்ததால்தான் நாம் சுதந்திரம் பெற முடிந்தது. அவரைப் பொறுத்தவரை எதிர்ப்பினால் நன்மையும் தீமையும் நிகழ்ந்துள்ளதை நாம் நன்றாகவே உணர் கின்றோம்.

அதேபோன்று தான் இந்தி எதிர்ப்பும் நிகழ்ந்துள்ளது. இந்தித் திணிப்பின் ஆரம்பித்தி லேயே அதை எதிர்த்ததால் முன்னாள் பாரதப் பிரதமர் நேரு பெருமகன் நாம் விரும்புவரை அதைத் திணிக்கக்கூடாது என்று வாக்குறுதிக் கொடுத்துச் செயலாற்ற வைத்துள்ளார். அதுதான் இன்றும் நடந்து வருகின்றது. இது நம் தமிழுணர்வாளர்களின் பாது காப்பாகி வருகின்றது.

அரசியல் என்றாலே எதிர்ப்புதான். ஒருவருக் கொருவர் கொள்கைகள் பிடிவாதங்கள் சுயநலங்கள் – இப்படி பல வகைகளில் அரசியல்வாதிகளிடையே எதிர்ப்புகள் கிளம்பிவிடும். அது கட்சிகளாக உரு வெடுக்கும்; அல்லது மாற்றுக் கட்சியில் சேர வழி வகுக்கும். எனக்குத் தெரிய தந்தை பெரியாரின் தலைமையிருந்த திராவிட கழகத்திலிருந்து கொள்கை ரீதியாக அண்ணாதுரை தலைமையில் திராவிட முன்னேற்றக் கழகம் பிரிந்தது. அதேபோன்று கலைஞர் கருணாநிதியின் தலைமையிலிருந்து தகராறின் காரணமாக எம்.ஜி.ஆர். தலைமையில் அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் உருவானது. இப்படியே ஒன்றின் எதிர்ப்பால் ஒன்று உருவாவதே அரசியலில் தொடர் நிகழ்வாகும். அது நன்மையில் முடிகிறதா அல்லது தீமையில் முடிகிறதா என்பது அந்தந்தக் காலத்தின் நிகழ்வாகும்.

காதல் என்ற வார்த்தை எல்லோர் மனத்திலும் ஒருவித கிளுகிளுப்பை ஏற்படுத்தும். கேட்க, படிக்க, இனிமையானதாகவே இருக்கும். திரைப்படங்களில் அந்தக் காட்சிகளைக் கண்டு ஆனந்திப்போம். அதுவும் தேவதாஸ் பாணியில் சோகத்தில்

முடிந்தாலோ அல்லது ஸ்ரீதரின் கல்யாணப்பரிசு முறையில் முடிந்தாலோ நம் மனம் நொந்து வேகும். நண்பர்களோடு சொல்லிச் சொல்லி மாய்ந்து விடுவோம். காதல் பாடல் காட்சிகளைக் கண்கொட்டாமல் கலை நயத்தோடும் காதல் உணர் வோடும் பார்த்து மகிழ்வோம். நமக்கு நிகழ்ந்து விட்டால் இந்திரபுரியே நம் கைக்குள் வந்துவிட்டதாகத் தலைகால் தெரியாமல் ஆடுவோம். வீட்டில் தம்பி தங்கைக்கோ பிள்ளைகளுக்கோ வந்து விட்டால் அதை ஏற்றுக் கொள்ளாமல் கடும் எதிர்ப்பைத் தெரிவித்து பெரும் பிரளயத்தை ஏற்படுத்தி வானத்திற்கும் பூமிக்கும் வாமன அவதாரம் எடுத்து ஆடாத ஆட்டத்தை ஆடி அல்லல் படுத்திவிடுவோம். அதுவும் மதம் மாறி, இனம் மாறி நடந்துவிட்டால், கேட்கவே வேண்டாம் – அவர்கள் நம் ரத்த உறவுகள் என்பதையும் மறந்து ஆணவக் கொலைகள் செய்யவும் தயங்க மாட்டோம். எதிர்ப்பு என்பது காதலுக்கு என்றுமே தீமை விளைவிப்பதே!

இப்படி எதிர்ப்புகள் இல்லாத வாழ்க்கையில்லை. எதிர்ப்பைக் கண்டு அஞ்சினால் நாம் வாழ முடியாது. நாம் பிறவி எடுத்தது வாழத்தான். இதை நாம் புரிந்து கொள்ளவேண்டும். எதிர்ப்பை எதிர்கொள்ளும் மனநிலையை நாம் வளர்த்துக் கொள்ளவேண்டும். எதிர்ப்புக்கு எதிர்ப்பு என்ற மனநிலையில் செயல்பட்டால் விளைவு தீமையில்தான் முடியும். நம் அறிவுத் திறமையால் அதை வலுப்பெறாமல் நாம் செயல்பட வேண்டும். அதுதான் நம் ஆறாவது அறிவின் திறமை. எப்படியென்றால் – சட்டத்தில் ஒரு கூற்றுண்டு – அதாவது ஒவ்வொரு வழக்கையும் அதனதன் அடிப்படையிலேயே முடிவு செய்யவேண்டும்; அடுத்ததையோ – எடுத்துக்காட்டையோ வைத்து செய்யக்கூடாது. அதுபோல்தான் நாம் சந்திக்கின்ற எதிர்ப்பினை அதனதன் தன்மைக்கேற்ப எதிர்கொண்டு வெடிமருந்தின் வீரியத்தினைச் செயலிழக்கச் செய்யும் முறையில் நாம் செயல்பட்டு வெற்றி கொள்ளவேண்டும்.

நண்பர்களே!

எதிர்ப்புகள் வரத்தான் செய்யும். ஆனால் துவளாதீர்கள். நல்லவழியில் நிதானமாகத் துணிந்து சிந்தியுங்கள்! வெற்றி பெறுவீர்கள்!

மக்கள் நலம் நாடும்,

**நீதிபதி மூ.புகழேந்தி**

அனைத்துத் துறையிலும் அழுத்தமான முத்திரை பதிக்கும்

# கவிஞர் அழகிரி பாண்டியன்



இலக்கியம் - திரைப்படம் - அரசியல் ஆகிய முத்தளங்களில் இயங்கி வருகிற கவிஞர் அழகிரி பாண்டியன் அவர்களுடன் சில மணித்துளிகள்

**நேர்காணல்:**
**கவிஞர் உமர்கத்தாபு**

**உங்களுக்குள் இருந்த கவிஞனை எப்படி எப்போது அடையாளம் கண்டீர்கள்?**

*பள்ளிப்பருவத்திலிருந்தே தமிழ்ப் பாட நூலிலுள்ள உரைநடை பகுதியைக் காட்டிலும் செய்யுள் பகுதி எனக்கு மிகவும் பிடித்தமானதாக இருந்தது. பொருள் புரியாவிட்டாலும் எல்லாச் செய்யுள்களையும் மனப்பாடம் செய்து விடுவது எனக்கு வாடிக்கையாக இருந்தது. ஆக, அப்பொழுதே எனக்குள் ஒரு 'கவிஞன்' முளை விட்டிருக்கிறான் என்பது இப்போது புரிகிறது.*

**உங்கள் முதல் கவிதை?**

*எட்டு வயதில் 'சத்திய சோதனை' படித்து முடித்ததும்*

*காந்தியின் மீது அளவு கடந்து பக்தி ஏற்பட்டது. அதன் விளைவு, நான் எழுதிய முதல் கவிதையே காந்தியடிகளைப் பற்றித்தான். எனது ஆரம்ப கால கவிதைகள் 'கல்கி', 'ராணி' இதழ்களில் வெளியாகி இருக்கின்றன.*

**கவிஞர்களுள் யாரை உங்கள் 'குரு'வாக நினைக்கிறீர்கள்?**

*எனக்கு முன்னர் இருந்த எல்லாக் கவிஞர்களும் எனது முன்னோடிகளே. குறிப்பாகச் சொல்ல வேண்டுமென்றால் கண்ணதாசனைத்தான் எனது 'குரு' என்று சொல்வேன். நான் தட்டுத் தடுமாறி எழுத ஆரம்பித்த காலத்தில் கண்ணதாசன் கவிதைகள்தாம் எனக்கு ஊன்றுகோலாக இருந்தது. குறிப்பாக அவரது 'இயேசு காவியம்' படித்த பிறகே எனக்கு முழுமையான கவிதைச் சிறகுகள் முளைத்தன. வெறும் கவிதைகள் மட்டுமே எழுதிக் கொண்டிருந்த எனக்குக் காவியம் புனையும் ஆற்றலையும் கொடுத்தது இயேசு காவியம்.*

**உரைநடையை, வரிக்கு ஒரு வார்த்தையாக எழுதி விட்டால் அதுதான் கவிதை என்கிற நிலைமை மாற வேண்டும்.**

**காவியம் எதுவும் புனைந்திருக் கிறீர்களா?**

*எனக்குக் கவிதைச் சிறகு கொடுத்த கண்ணதாசனுக்கு இந்தச் சீடனின் தட்சணையாக, அவரது வாழ்க்கை வரலாற்றை மரபுக் கவிதையில் 'கண்ணதாசன் காவியம்' என்ற பெயரில் எழுதியிருக்கிறேன். இதைக் கண்ணதாசன் பதிப்பதிகம் வெளியிட்டிருக்கிறது.*

**உங்களது முதல் கவிதைத் தொகுதி?**

*மரபுக் கவிதைகள் மட்டும் அடங்கிய 'தமிழுக்கு முளைத்த சிறகுகள்' எனது முதல் கவிதைத் தொகுதியாகும். இது இலக்கிய உலகில் எனக்கு பரவலான அறிமுகத்தையும் பாராட்டுகளையும் பெற்றுத் தந்தது.*

**கண்ணதாசனைப் பற்றி வேறு ஏதேனும் நூல்கள் எழுதியிருக்கிறீர்களா?**

*அவரது முதற்காதலை ஆய்வு செய்து 'கண்ணதாசனின்*

முதல் காதல்', அவரது அரசியலை ஆய்வு செய்து 'கண்ணதாசன் கவிதைகளில் அரசியல்' மற்றும் 'கண்ணதாசன் பாடல்களில் தன்னம்பிக்கை', 'கண்ணதாசன் பாடல் பிறந்த கதைகள்', 'கண்ணதாசனின் காமத்துப்பால்' ஆகிய நூல்களை படைத்திருக் கிறேன்.

**திரைப்படத்துறையில் பாடல் எழுதிய அனுபவம்?**

எழுத்தாளர் தாமரை செந்தூர் பாண்டி அவர்கள் இயக்கிய 'குருவம்மா' என்ற படத்தில் தான் எனது முதல் பாடலை எழுதினேன். அடுத்து 'சிவகிரி' என்ற படத்தில் அனைத்துப் பாடல்களையும் எழுதி அதில் ஓர் உதவி இயக்குநராகவும் பணிபுரிந்திருக்கிறேன்.

**இலக்கியம் - சினிமா தவிர..?**

அ.தி.மு.க.வின் இலக்கிய அணியில் தென் சென்னை வடக்கு மாவட்ட இணைச் செயலாளராகப் பணியாற்றி வருகிறேன். அம்மா அவர்களின் வாழ்க்கை வரலாற்றைப் 'பாரதத்தின் பேரரசி' என்ற பெயரில் 'புதுக்கவிதை காவிய'மாக எழுதியிருக்கிறேன். அ.தி.மு.க.வின் வரலாற்றைத் தொகுத்து 'அ.இ.அ.தி.மு.க ஒரு புரட்சியின் வரலாறு' என்ற தலைப்பில் எழுதியிருக்கிறேன். இது இந்த இயக்கத்தின் மாபெரும் வரவேற்பைப் பெற்றிருக்கிறது. எம்.ஜி.ஆர் அவர்களின் நூற்றாண்டு விழாவையொட்டி அவரது இளமைக்கால நாடக வாழ்க்கையைத் தொகுத்து 'ஆயிரத்தில் ஒருவன் ஆனது எப்படி?' என்ற நூலையும் எழுதியிருக்கிறேன்.

**தற்போதைய கவிதை உலகம் குறித்து என்ன சொல்கிறீர்கள்?**

உரைநடையை, வரிக்கு ஒரு வார்த்தையாக எழுதி விட்டால் அதுதான் கவிதை என்கிற நிலைமை மாற வேண்டும். சிலப்பதிகாரம், கம்ப காவியம் போன்ற காவியங்கள் தமிழுக்கு மீண்டும் கிடைக்க வேண்டும்.

**அதற்கான முயற்சியில் நீங்கள் ஈடுபட்டிருக்கிறீர்களா?**

மகாபாரதத்தைக் காவியமாக்கும் முயற்சியில் ஈடுபட்டிருக்கிறேன். எனக்கு முன்னர் சிலர் இதைச் செய்திருந்தாலும் என்னுடைய இந்த முயற்சி தமிழ் இலக்கியத்திற்கு மிகச் சிறந்த பங்களிப்பாக இருக்கும் என்று நம்புகிறேன்.

✪



# வைகை நீரே! வாழ்க

**நீதிபதி மூ. புகழேந்தி**

வைகைநதி நீர்வளர்ந்து வானைத் தொட்டு
வைரமுத்துப் பெருங்கவியாய் உயரக் கண்டேன்
கைவைக்கும் இடமெல்லாம் கவிதைக் கொட்டும்
மைவித்தைக் காரரென்னும் மாயம் கண்டேன்
ஐவகைநல் நிலங்களுமே அவர்தன் பாட்டால்
ஆனந்த பூரிப்பில் ஆடக் கண்டேன்.
பொய்யில்லை; இவர்புகழைப் பூமி தாங்கிப்
பூரித்துக் களிக்கின்ற அழகும் கண்டேன்.



திரையுலகம் இவர்பாட்டால் திசைகள் தோறும்
நீள்கரங்கள் நீட்டித்தான் புகழ்மாந் திற்று.
விரைந்தோடும் தென்றல்தான் வேக மற்று
விருப்புற்று இவர்பாட்டில் கலந்தா டிற்று.
சிறைவாழும் கைதிகளும் கவலை தீர
இவர்பாட்டில் சொக்குண்டு மயக்கம் கொண்டார்.
அறைவாழும் காதலர்கள் அணைப்பில் இன்பம்
அள்ளியள்ளி மாந்திடவே மருந்தும் தந்தார்.

வைரமுத்து பாடலென்றால் வையந் தன்னில்
வரிசையிலே முந்திடுமாம்! ஈதே உண்மை!
வைரமிகு நெஞ்சமெல்லாம் இளகி மெல்ல
வழிந்தோடும் மகிழ்ச்சியென்னும் இன்பத் தாலே!
வைரமுத்து மாக்கவிஞன் உலகில் இன்று
ஏழாம்முறை விருதுபெறும் வித்தைக்காரர்.
வைரங்கள் அவர்சொற்கள்! வாழ்க! வாழ்க!
வையம்போல் எந்நாளும் நிலைத்து வாழ்க!

✪

# வெள்ளத் தாண்டவம் ஓர் பார்வை




**பேராசிரியர் அபிராமி**
முனைவர்பட்ட ஆய்வாளர், தமிழ்த் துறை,
பெரியார் பல்கலைக்கழகம்
சேலம் 636 011.

**வா**னம் அளந்து அனைத்தும் அளந்திடும் என்று பாரதி போற்றிப் பாராட்டுகின்ற தமிழ்மொழியின் இலக்கிய வரலாற்றில் காப்பியங்களின் பங்கு இன்று வரை எப்படி உள்ளது என்பதை ஆராய்வதே இக் கட்டுரையின் நோக்கம் ஆகும்.

தமிழ் என்னும் சொல்லுக்கு இனிமை என்று பொருள் இனிமையும் நீர்மையும் தமிழ் எனலாகும் என்று பிங்கல நிகண்டு தமிழினிமைக்குச் சான்று பகர்கிறது.

அணிக்கு இலக்கணம் சொல்லும் தண்டியலங் காரம் “பாவிகம் என்பது காப்பியப் பண்பே” என்று

காப்பியத்திற்கு இலக்கணம் சொல்லுகிறது. பாவிகம் என்றால் தொடர்நிலைச் செய்யுள் எனப்பொருள் படும். தொடர்நிலை செய்யுள் போன்று நீண்ட செய்யுள்களைக் கொண்ட நூல்கள் உருவாக வேண்டுமானால் மிகச் செல்வச் சிறப்பு மிகுந்த அரசு ஆட்சி பீடத்தில் அமைந்திருக்க வேண்டும். அத்தகைய சிறப்பு மிகுந்த அரசாட்சி கி.பி.9 ஆம் நூற்றாண்டு முதல் ஏறக்குறைய 400 ஆண்டுகள் சோழப் பேரரசின் ஆட்சிக்காலத்தில் அமைந்தது.

**காப்பிய இலக்கணம்**

தொல்காப்பியர் குறிப்பிடும் எண் வகை வனப்புகளில் தோல், இயைபு, இழைவு, புலன் இந்நான்கு வனப்பு களில் காப்பியத்திற்குரிய கூறுகள் இடம் பெற்றுள்ளன.

"பரந்த மொழியால் அடிநிமிர்ந்து ஒழுகும்"

தொல் 1494

"தொன்மை தானே உரையோடு புணர்ந்த பழைமை மேற்றே"

தொல் 1493


என்ற நூற்பா வழி அறிய முடிகிறது.

தன்னேரில்லா தலைவன், கடவுள், வாழ்த்து, மலை, கடல், நாடு, நகர், பருவங்கள், சந்திரோதயம், சூரியோதயம் பற்றிய வருணனைகள், திருமணம், முடி புனைதல், பொழில் விளையாட்டுகள், புதல்வர்ப்பேறு, புலவி, கல்வி, மந்திராலோசனை, தூது விடுத்தல், போர் செய்தல், வாகை சூடுதல் முதலிய உறுப்புக்களைப் பெற்று அறம், பொருள், இன்பம், வீடு ஆகிய நான்கினையும் வற்புறுத்துவதாகவும் சருக்கம், இலம்பகம் ஆகிய பிரிவுகளை உள்ளடக்கியதாகவும் எண் வகைச் சுவையும் பாவமும் விளங்கச் செய்திகளைக் கூறுவதாய் அமைவது பெருங்காப்பியம். இவற்றுள் ஒன்றோ இரண்டோ குறைய வருவது சிறுகாப்பியம்.

காப்பியம் என்பதே காவியம் என்னும் வடசொல்லின் திரிபு என்பது ஆராய்ச்சிக் குரியதே. ஏனெனில் காப்பியம் என்னும் வழக்கு பழங்காலம் தொட்டே தமிழில் உள்ளது.

**கி.மு.2 - கி.பி 2**

சங்க காலத்தின் இறுதியில் தோன்றிய



காப்பியங்கள் இரண்டு அவை சிலப்பதிகாரம், மணிமேகலை ஆகியவை ஆகும். இவற்றை இரட்டைக் காப்பியங்கள் என்றும் அழைப்பர்.

சிலப்பதிகாரம் "நாட்டுதும் யாமோர் பாட்டுடைச் செய்யுள்" சாத்தன் கதை கூறக் கேட்ட இளங்கோவின் கூற்று இதன் அடிப்படையிலே சிலப்பதிகாரம் என்னும் முத்தமிழ் காப்பியம் தமிழன்னைக்குக் காலுக்கு அணிகலன் ஆயது. மூன்று காண்டம், முப்பது காதை, மூன்று உண்மை இவை யெல்லாம் பகரும் சமணக் காப்பியம்.

பெண்ணின் பெருமையை முதன்முதலாக காவிய வடிவில் உலகிற்கு உணர்த்திய பெருமை இக்காப்பியத்தையே சாரும். காப்பியத்தின் பெயராலும் புரட்சி செய்த காப்பியம்.

மணிமேகலை

“வளங்கெழு கூலவாணிகன் சாத்தன்

மாவண் தமிழ்த்திறம் மணிமேகலைத்துறவு

ஆறைம் பாட்டுனுள் அறிய வைத்தனென்”

மணிமேகலை பதிகம் 95 வரிக் கூறுகிறது. சிலம்பொடு கதை தொடர்புடைய மாதவி மகள் மணிமேகலையின் கதை 30 காதைகளில் சொல்லும் பௌத்தக்காப்பியம்.

பசி தான் உலகில் மிகக் கொடியது பசி தீர்ந்தால் உலகத்தில் அமைதித் தோன்றும் என்பதை உலகிற்கு உணர்த்த “பசியும் பிணியும் பகையும் நீங்கி வசியும் வளனும் சுரக்கென வாழ்த்தி” உவகைக் கொள்ளும் காப்பியம்

**சீவகசிந்தாமணி**

விருத்தப்பாவால் எழுந்த முதல் காப்பியம். சமணக் கோட்பாடுகளை மக்களுக்கு விளக்கிட உருவான சமணக் காப்பியம்.

இந்நூலை மணநூல் என்றும் அழைப்பர்.

வடமொழி நூல்களான சந்திரசூடாமணி, சத்திய சிந்தாமணி, ஸ்ரீ புராணம் போன்ற நூல்களின் தழுவல் என்பர். 13 இலம்பகங்களைக் கொண்டது.

**வளையாபதி**

வைசிய புராணத்தின் மூலம் இக்கதை அறிய முடிகிறது. 72 பாடல்களை மட்டுமே கிடைத்துள்ளன. நூல் முழுமையாகக் கிடைக்க வில்லை. சமண சமயக் காப்பியம்.

**குண்டலகேசி**

விருத்தப்பாவால் இயற்றப் பட்ட காப்பியம். வைசிகப் புராணத்தின் 34 ஆம் அத்தியாத்தின் வழி இந்நூலின் கதையை அறிய முடிகிறது. இது ஒரு தருக்க நூல். நூல் முழுமையாகக் கிடைக்க வில்லை.

**உதயணகுமாரகாவியம்**

ஆறு காண்டங்களையும் 377 செய்யுட்களையும் கொண்டது. விருத்தப்பாவில் அமைக்கப்பட்ட நூல். இது சமண சமய காப்பியம்.

**நாககுமார காவியம்**

இது சமண சமய காப்பியம்.

**யசோதர காவியம்**

*இது சமண சமய காப்பியம். 5 சருக்கங்களையும் 320 பாடல் களையும் கொண்டுள்ளது.*

**சூளாமணி**

*தோலா மொழித்தேவர் காப்பிய அமைப்பிற்குரிய வகையில் நூலை அமைத் துள்ளர். இருப்பினும், இந்நூலை ஐஞ்சிறு காப்பியம் என்றே தமிழிலக்கிய வரலாறு கூறுகிறது. இது 12 காண்டங்களை 2330 செய்யுட்களைக் கொண் டது.*

**நீலகேசி**

*இது சமணக் காப்பியம். ஐம்பெரும் காப்பியங்களில் குண்டலகேசிக்கு எதிரான தருக்க நூல்.*

*இவற்றைத் தொடர்ந்து தமிழிலக்கிய வரலாற்றில் தோன்றிய காப்பியங்களின் பெயர்கள் பின்வருமாறு*

***பிம்பசாரக் கதை***

***மேரு மந்திர புராணம்***

***கம்பராமாயணம்***

***பெரியபுராணம்***

***கந்தபுராணம்***

***பெருங்கதை***

*தற்காலத்தில் தோன்றி வழக்கிலுள்ள குறுங்காப்பியங்கள்*

***மருமக்கள் வழி மான்மியம்***

***பாஞ்சலி சபதம்***

***பாண்டியன் பரிசு***

***அவனும் அவளும்***

***மாங்கனி***

***பரா சக்தி மகா காவியம்***

***இராவண காவியம்***

***திருத்தொண்டர் காப்பியம்***

*இவ்வாறான காப்பிய இலக்கிய வரலாற்றில் 21 ஆம் நூற்றாண்டில் மானிடத்தை முன்னிறுத்தி எக் காப்பியத்தையும் தழுவலும் அல்லாமல் 643 ஆசிரிய விருத்தங்களை உள்ளடக்கி வெள்ளத் தாண்டவம் என்னும் நூலை நீதிபதி மு.புகழேந்தி அவர்களால் காப்பிய மாண்புகள் எல்லா வற்றையும் ஒருங்கே பெற்று பெருங்காப்பியமாக வெளியிடப் பெற்றுள்ளது. தமிழன்னைக்கு மேலும் ஓர் காப்பிய அணிகலன்!.*

*மானிடம் சிறக்க!மனிதம் வாழ்க!*

✪

# வள்ளலார் காட்டும் பக்திநெறி

முனைவர் இ.சா. பர்வீன் சுல்தானா
உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை,
நீதிபதி பஷீர் அகமது மகளிர் கல்லூரி,
சென்னை.

சாதியும் மதமும் சமயமும் பொய்
சாதியும் மதமும் சமயமும் தவிர்ந்தேன்
சாத்திர குப்பையும் தணிந்தேன்
சாதியிலே மதங்களிலே
சமய நெறிகளிலே
சாத்திரச் சந்தடிகளிலே கோத்திரச்
சண்டையிலே
ஆதியிலே யபிமானித் தலைகின்ற
உலகீர்
அலைந்தலைந்து வீணே நீர் அழிதல்
அழகல்லவே...
– வள்ளல் பெருந்தகை

*நாட்டில் பல்வேறு சமயங்கள் சமயங்களை பெருகி, தந்தம் சமயம் சார்ந்தோர் ஒருவரையொருவர் சண்டையிட்டு கொண்டு, மதம் குறீத்த விவாதத்தில் ஈடுபட்டிருந்த காலகட்டத்தில், எல்லோருக்கும் அருள்புரியும் இறை ஒன்றே என்பதோடு, உருவமில்லாத பூள் வடிவமாக இறைவனை கண்டவர் வள்ளலார்.*

"நால்வருண மாச்சிரம மாசார முதலா
நவின்றகலைச் சரிதமெலாம் பிள்ளை
விளையாட்டே
மேல் வருணந் தோல்வருணங்
கண்டறிவாரிலை நீ
விழித்திதுபா ரென்றெனக்கு விளம்பிய
சற்குருவே"

*என்று கருணையின் வடிவமாக பக்தி நெறியை புகுத்தியவர் வள்ளலார்.*

"காட்டைக் கடந்தேன் நாட்டை அடைந்தேன்
கவலை தவிர்த்தேன் உவமை மிகுந்தேன்
வீட்டைப் புகுந்தேன் தேட்டமுதுண்டேன்
வேதாகமத்தின் விளைவெல்லாம்
பெற்றேன்"

*என்று இவ்வாழ்வில் தான் காணும் அனைத்தும், அனுபவிக்கும் எந்த ஒன்றும், நிகழும் செயலும் இறைவனின் செயலே என்று முற்றும் ஒப்படைத்து விடும் கனியர் நிலையை பக்தி நெறியாக வெளிப்படுத்துகிறார்.*

*சாதி, சமயம், இனபேதம் கடந்து இறைவனை காண முயலும் பக்தி நெறியையை தன் வாழ்நாள் முழுதும் பரப்பிய வள்ளலார் சமரச சன்மார்க்க கொள்கை கொண்டவராய் திகழ்ந்தார். அதாவது சமயம்,*

*சாதி, நாடு, மொழி கடந்த பக்தி நெறியை முன் நிறுத்தினார்.*

சாதியும் மதமும் சமயமுங் காணா
ஆதி அநாதியிம் அருட் பெருஞ்சோதி
சாதியும் மதமும் சமயமும் பொய்யென
ஆதியில் உணர்த்திய அருட்பெருஞ்சோதி

*என்று ஓர்குலம் எல்லோரும் ஓர் நிறை என்ற குறட்பாட்டை பக்தி நெறியில் புகுத்தினார்.*

காணுறு பசுக்கள் கன்றுகளாதி
கத்திய போதெல்லாம் பயந்தேன்
ஏணுறு மாடு முதல் பல மிருக
மிளைத்தவை கண்டுள மிளைத்தேன்
கோணுறு கோழி முதல் பல பறவைகள்
கூவுதல் கேட்டுளங் குலைந்தேன்
வீணுறு கொடியர் கையிலே வாளை
விதிர்த்தல் கண்டென்ன வெகுண்டேன்

*என்று உயிர்களிடத்து பேரன்பு கொண்டு, மனிதரெல்லாம் உயிர்களை காதலிப்போம் என்ற மந்திரத்தை பரப்பினார். உயிர்களை காப்பதும், சிறு உயிர்களின் பசி போக்குவதும், அதற்காக பணி செய்வதுமே இறைவனுக்கு செய்யும் தொண்டு என்பதே அவரது பக்தி நெறியாகவும், அவர் வகுத்த பக்தி கோட்பாடாகவும் இருந்தது. வாடிய பியிரை கண்டபோதெல்லாம் வாடிய வள்ளல் பெருமானார், "ஆருயிர் கட்கெல்லாம் அன்பு செய்ய வேண்டும்" என்பதை பக்தி நெறியில் கொள்கையாக அமைத்தார்.*

*ஆருயிருக்கெல்லாம் அன்பு செயல்வேண்டும் என்ற வரத்தை, இறைவனின் கேட்கும் வள்ளலார்,*

அன்பெனும் பிடியுள் அகப்படும் மலையே
அன்பெனும் குடில் புகும் அரசே
அன்பெனும் அலைக்குள் படும் பொருளே
அன்பெனும் காத்தமர் அமுதே
அன்பெனும் கடத்துள் அடங்கிடும் கடலே
அன்பெனும் உயிர் ஒளி அறிவே
அன்பெனும் அணுவுள் அமைந்த
பேரொளியே...

*என்று "அன்பே இறை" என்ற உயரிய தத்துவத்தை பரப்பி,*

"அன்பின் வழியது உயிர்நிலை அஃதிலார்க்கு
என்பு தோல் போர்த்த உடம்பு"

*என்ற வள்ளுவரின் குறளை தன் குரலாக உலகுக்கு உணர்த்தினார்.*

*சமுதாயத்தில் வாழும் மக்கள் கடைபிடிக்க வேண்டிய தலை சிறந்த அறம் பசித்தோர்க்கு உணவு அளிப்பதே என்ற பசிப்பிணி மருத்துவத்தை முன்னெடுத்த வள்ளல் பெருந்தகை, மூடநம்பிக்கையை ஒழிப்பதிலும் தன் கவனத்தை கொண்டிருந்தார்.*

"கண்மூடி வழக்கமெல்லாம்,
மண்மூடி போக வேண்டும்"

*என்ற கொள்கையை பரப்பி, மூடநம்பிக்கையில் நடைபெறும் ஆடு, மாடு, கோழி போன்ற உயிர் பலிகளை வெறுத்தார். மேலும் உருவ வழிபாட்டையும்*

புறம் தள்ளி, இறைவனை உருவமின்றி அருட்பெருஞ் சோதியாய், ஒளிமயமாய், சுடரொளியாய் கண்டார்.

பார்ப்பனர், சத்திரியர், வைசியர், சூத்திரர் என வட நூலில் கூறப்பட்ட நால்வகை வருணங்களும் பிரம்மச்சரியம், கிருகஸ்தம், மானப்பிரஸ்தம், சன்னியாசம் என கூறப்படுகின்ற நால்வகை ஆசிரமப் பகுப்புகளும், சிறு பிள்ளைகள் அவர்களின் விளையாட்டுக்களில் வரையறை செய்து கொள்ளும் விளையாட்டு விதிகளைப் போலன்றி, பக்தி நெறிக்கு உதவாது என்பதில் உறுதியாய் இருந்தார்.

எல்லா மத வழிபாடுகளும், முழுமுதற் பொருளாகிய ஒன்றையே குறிப்பிடுகிறது என்று முந்தையோர் வகுத்தளித்த சமயப்பொது நிலைப்பாட்டை, தன் வாழ்வின் குறிக்கோளாகக் கொண்டு "ஒன்றே குலம் ஒருவனே தேவன்" என்ற மந்திரத்தை மக்களிடம் கொண்டு சேர்த்தார்.

"ஒன்றுமலார் இரண்டுமலார்
ஒன்றிரண்டும் ஆனார்
உருவும் அலார் அருவும் அலார்உரு
அருவும் ஆனார்
அன்றும் உளார் இன்றும் உளார்
என்றுமுளார் நமக்கோர்
ஆதியிலார் அந்தமிலார்
அருட்பெருஞ் ஜோதியினார்
என்று கனல் மதியகத்தும்
புறத்தும் விளங்கிடுவார்
யாவுமிலார் யாவுமுளார் யாவும்
அலார் யாவும்
ஒன்றுறுதாம் ஆகி நின்றார்
திருச்சிற்றம்பலத்திலே
ஓங்குகின்ற தனிக்கடவுள் ஒருவர்
உண்டே கண்டீர்"

– திருவருட்பா 3282

உலக உயிர்களை இயக்கி வரும் முழு முதற் கடவுள் ஒருவரே என்பதும், ஒன்றே குலம் ஒன்றே தெய்வம் என்னும் திருமூலர் கருத்தையே வள்ளல் பெருந்தகையும் கொண்டிருந்தார். உயிரெலாம் ஒன்றாக வாழவும், பயிரெலாம் ஒன்றாக தழைக்கவும், பதியெல்லாம் உயர்கதி அடையவும் தன்னை அர்ப்பணித்து கொண்ட வள்ளல் பெருந்தகை திருமூலர், தாயுமானவர், பாரதியார் வழியில், அதேசமயம் சமய வழிபாட்டில் புதுமையும், சீர்திருத்தமும் செய்து உலகளாவிய பக்தி நெறியை நமக்களித்தார்.



# யோகாசனத்தின் சிறப்புகள்

**மரு.மோ. கலைவாணன்**
B.S.M.S., M.Sc (யோகா)., Dip. (Acu.)

ஜூன் இருபத்திஒன்றாம் தேதியை சர்வதேச யோகா தினமாக அரசு கொண்டாட ஆரம்பித்த பிறகு எல்லா தரப்பு மக்களிடத்திலும் அதைப் பற்றிய விழிப்புணர்வை அதிகமாக ஏற்படுத்தி உள்ளது. யோகா செய்தால் உடல் நலத்துடன் மனமகிழ்ச்சியுடன் இருக்கலாம் என்று அனைத்து தரப்பினர்களும் ஏற்றுக்கொண்டுள்ளனர். இப்படிப்பட்ட யோகாவின் பயனை இன்னும் சற்று ஆழமாக பார்க்கலாம்.

யோகா பயிற்சியின் மூலம் மேற்கொள்ளப்பட்ட ஆய்வின் முடிவுகள் முதுகு வலியிலிருந்து புற்றுநோய் வரை நல்லவிதமான மாற்றங்களை பிணியாளர்களின் உடலில் ஏற்படுவதாக கூறுகின்றனர். ஆசனங்களின் மூலம் உடல் வளையும் தன்மையை நிலைநிறுத்தி கொள்கிறது. குனிந்து நிமிரும் பழக்கம் குறைவாகிப் போனால்

இடுப்பின் தசைகள் இறுக்கம் அடைந்து மூட்டு எலும்பின் இணைப்பில் தன் தாக்கத்தை தந்து மூட்டுவலியாக உருகொள்கிறது.

உடலின் தசைகள் வலுவிழந்து போனால் பலவிதமான சிக்கல்களை சந்திக்க நேரிடும். குறிப்பிட்டு சொன்னால் மூட்டுவலி, முதுகுவலி, சீக்கிரத்தில் முதுமை போன்றவைகள். ஆசனப் பயிற்சிகளின் மூலம் தசைகளை வலிமை அடையச் செய்வது மட்டுமில்லாமல் அதன் செயல்பாடுகளும் நன்றாக இருப்பதற்கு ஆதாரமாக விளங்குகிறது.

தசைகள் வலிமையாக இருந்தால் முதுமையிலும் சரி இளமையிலும் சரி தடுமாறி விழும் நிலை இருக்காது. ஆசனங்கள் உடலின் சமநிலையை பாதுகாக்கிறது. பலத்தில் இருந்து இடதோ, முன்பக்கத்திலிருந்து பின்பக்கமாகவோ உடல் அசைக்கின்ற பொழுது பாதுகாப்பாக இருக்கும்.

பலவிதமான ஆசனங்கள் உடலின் நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரிக்கச் செய்கிறது. கூடவே தவமும் இதில் மிகப்பெரிய பங்கை ஆற்றுகிறது. தவத்தினால் மனம் தெளிவடைகிறது மரபணுவில் நல்ல பதிவுகளையும் பதிக்க செய்து மிகப்பெரிய மாற்றத்தை மனிதர்கள் வாழ்வில் அடைகின்றனர். நோய்களில் முக்கியமாக சொரியாசிஸ் என்கிற தோல் வியாதிகளுக்கு மிகச் சிறந்த மருந்தாகத் தவம் விளங்குகிறது.

நிறைய மனிதர்களுக்கு முதுகு, கழுத்து மற்ற தசை பகுதிகளில் வலி வருவதற்கு மிக முக்கிய காரணம் அவர்கள் அமரும் பொழுதும் நடக்கும் பொழுதும் கூன் போடுவதும், நேரே நிமிர்ந்து நடக்காமல் தலையை சிறிது கவிழ்த்தவாறே செல்வதும் போன்றவைகள். இதனால் எலும்புகள் மீது அழுத்தம் தரவே அவை வலியாக வெளிவருகிறது. ஆசனங்கள் சரியான முறையில் அமர்வதையும் நடப்பதையும் உடலுக்குப் பழக்கப்படுத்து கிறது.

சாதாரண மக்களுடன் யோகி களை ஒப்பிடும்பொழுது அவர் களின் சுவாசம் மிக ஆழமாகவும் இருக்கும். இம்முறையாக சுவாசம் நரம்பு மண்டலத்தை அமைதிபடுத்துகிறது. மூச்சுப் பயிற்சிகளைத் தொடர்ந்து செய்யும்பொழுது சாதாரண மனிதனும் மேலோட்டமான மூச்சு பழக்கத்திலிருந்து மாறி ஆழமாக சுவாசிக்க ஆரம்பிக்கிறான்.

சுவாசிப்பதில் சில மனிதர்கள் வாய் வழியாகவும் மூச்சு வெளி விடுகின்றனர். இது தவறான பழக்கம். இதனால் நாவறட்சி, வாய்துர்நாற்றம், இரவில் உறங்கும்பொழுது குறட்டை விடுவது போன்றவை ஏற்படும். இவர்களுக்கு மூச்சு பயிற்சி

நல்ல மாற்றத்தை கொடுக்கும்.

இரத்த அணுக்களின் பெருக்கத்தை ஆசனங்கள் அதிகரிக்கச் செய்கின்றன. அதிகமாக ஆக்ஸிஜனை நுரையீரல் உட்கொண்டு மூளைக்கு அனுப்புகிறது. இதனால் எப்பொழுதும் சுறுசுறுப்பாக உடல் இருக்கிறது.

ஆசனங்களின் பயிற்சியின் பொழுது முன்பக்கம் குனிவது, பின்பக்கம் நிமிருவது, பக்கவாட்டில் உடலை திருப்புவது போன்ற செயல்பாடுகளின் மூலம் முதுகு எலும்பு உறுதி அடைகிறது.

சீனர்களின் பழமொழி ஒன்றுண்டு 'முதுமை அடைவது பாதத்தில் இருந்து தொடங்குகிறது! யோகாவின் பயிற்சிகள் முதலில் கால்களை பலப்படுத்துவதாக அமைகிறது. கால்கள் பலவீனமடைவதால் வரும் மூட்டுவலி, குதிகால் வலி, இடுப்பு வலி போன்றவை ஒன்றன்பின் ஒன்றாக ஏற்படுவதை முற்றிலுமாக தடுக்கிறது.

நிறைய ஆராய்ச்சிகள் தெரிவிப்பது என்னவென்றால் யோகாவை தினசரி பயிற்சி செய்பவர்களுக்கு உடல் எடை கணிசமான அளவு குறைந்திருப்பதாக கூறுகிறார்கள். உடல் பருமனுக்கு மிகச் சிறந்த நிவாரணியாகவும் விளங்குகிறது.

உடல் மீதான விழிப்புணர்வு அதிகமாக இருக்கும். எளிமையான சில பயிற்சிகளின் மூலம் நம் உடலை நம் கைக்குள் வைத்துக் கொள்ள முடியும். இதனால் தூக்கம் வராமல் அல்லல்படும் பொழுதோ அல்லது இரத்த அழுத்தம் அதிகரிக்கும் பொழுதோ போன்ற இந்த துன்பங்களை எல்லாம் நாமே கடந்து வரமுடியும்.

மூளையின் செயல்பாடுகளை அதிகரிக்க யோக பயிற்சிகள் உதவுகின்றன. பலதரப்பட்ட ஆசனங்களில் மூச்சுவிடும் முறையில் நிறைய உத்திகள் கையாளப்படுகிறது. காட்சிப்படுத்துதல், மந்திரங்களை உச்சாடனம் செய்வதும், பல் வேறான தவமுறைகள் அனைத்தும் மூளைக்கு நல்விருந்தாக அமைகிறது. இப்படி புதிய விஷயங்களை தொடர்ந்து கற்றுக்கொண்டே வருவதால் மூளையும் மனமும் என்றும் இளமையாகவே இருக்கும்.

சர்க்கரை நோயின் தாக்கம் அதிகமாக இருந்தால் இதய நோய், சிறுநீரகம் செயல் இழந்துவிடுதல், கண்பார்வை பாதிப்பு ஏற்படும். ஆசனங்கள் தொடர்ந்து மேற்கொள்வதால் சர்க்கரை நோயின் தாக்கம் குறையும். இன்சுலின் அளவு அதிகமாகாமலும் குறைந்து போகாமலும் பார்த்து கொள்ளும். வாழ்வில் துயரம் ஏற்படும் பொழுதெல்லாம் உடலில் அட்ரீனல் சுரபி அதிகமாக

சுரந்து மன அழுத்தத்தை உண்டாக்குகிறது. மனிதர்கள் அன்றாடம் மன உளைச்சல் அடைவதால் இந்த சுரபியும் அதிக வேலை செய்து நோய் எதிர்ப்பு சக்தி, உடல் தடை, ஞாபக மறதி போன்றவைகளில் மிகப் பெரியதாக்கத்தை ஏற்படுத்துகிறது.ஆசனங்களின் மூலம் அட்ரீனல் சுரபியை ஆரோக்கியமாக மாற்றுகிறது.

சில ஆராய்ச்சிகளின் முடிவுகள் யோகாவும் தவமும் இணைந்து உடலில் ஏற்படும் வலிகளுக்கு வலி நிவாரணியாக செயல்படுவதாகவும் கூறுகின்றனர். முக்கியமாக மூட்டுவலி, முதுகுவலி போன்றவை. இந்த பயிற்சிகள் ‘நாம் வேறு இந்த உடல் வேறு’ என்ற தத்துவத்தை கொண்டு இருப்பதால் வலியை எண்ணங்களால் பிரித்து அறியவும் புறந்தள்ளவும் முடியும்.

ஆஸ்த்துமா, இருதய நோய், இரத்த அழுத்தம், சர்க்கரை நோய் பிணியாளர்கள் மருந்து சாப்பிட்டுக் கொண்டே யோகாவும் பயிற்சி செய்யும்பொழுது மருந்து எடுத்துக் கொள்ளும் அளவுகள் குறைவதாகவும் ஆராய்ச்சி தெரிவிக்கிறது.

அதிகமாகவும் தொடர்ந்து எடுத்துக் கொள்வதால் ஆங்கில மருந்துகளால் உண்டாகும் பாதிப்புகளையும் தவிர்க்க முடியும்.

யோகா பயிற்சி செய்பவர்கள் முன்பிருந்த உடல் நிலைக்கும் இப்பொழுது இருக்கும் உடல் நிலைக்கும் நல்ல முன்னேற்றத்தை உணர்வார்கள். தினசரி நடைபயிற்சி மேற்கொள்வர். பசி எடுத்து பின் உண்பார்கள். புகைப் பழக்கம் இருந்தால் குறைத்துக் கொள்வார்கள். பயிற்சியை தொடர்ந்து செய்துவர, நம்மை அறியாமல் தீய பழக்கங்கள் ஒன்றன்பின் ஒன்றாக விடைபெற்றுச் சென்றுவிட, நல்ல வழக்கங்கள் தொற்றிக் கொள்ளும்.

மனதில் இருக்கும் தாழ்வு மனப்பான்மை, கூச்சம், தயக்கம், தோல்வி மனப்பான்மை, தன்னம்பிக்கை இன்மை, சமநிலையற்ற எண்ணங்கள் போன்ற உளவியல் சார்ந்த பிரச்சினைகளும் யோகாவின் மூலம் சரி செய்யப்படுகின்றன.

உடல் ஆரோக்கியமும் மன ஆரோக்கியமும் மேம்பட்ட பிறகு ஆன்மாவின் தேடல்கள் ஆரம்பிக்கும். பிறப்பின் காரணத்தை அறியத் துடிப்பர். ‘நான் யார்’ என்று மனம் அலச ஆரம்பிக்கும். அதற்கேற்ற குருவை நாடிச் செல்ல மனம் விரும்பும். தேடல்கள் தொடர்ச்சியாகவும் நம்பிக்கையுடனும் இருந்தால் அவர்களுக்கென்று குருவை இயற்கையே காட்டிக் கொடுக்கும்.

✪

## இளம்பூரணர் - பேராசிரியர் உரையில்

# மரபுப்பெயர்கள் ஒப்பீடு

**ர. உமாராணி,**
முனைவர்பட்ட ஆய்வாளர்,
பெரியார் பல்கலைக்கழகம்
சேலம் 636 011.

### முன்னுரை

தொல்காப்பியத்திற்கு உரை வகுத்தவர்களில் முதன்மை யானவராகக் கருதப்படுபவர் இளம்பூரணர். 'உரையாசிரியர்' என்னும் சிறப்புப் பெயரைப் பெற்றவரும் இவரே. தொல்காப்பிய பொருளதிகாரத் தில் பின் நான்கு இயலுக்கு மட்டும் விரிவானதொரு உரை வகுத்தவராகக் கூறப்படுவர் பேராசிரியர். இவர்கள் இருவரும் பொருளதிகாரத்தில் மரபுப் பெயர்களை எவ்வாறு வகைப்படுத்தி உரை வகுத் துள்ளனர் என்பதையும், இலக்கியங்களைக் கொண்டு இலக்கணம் இயற்றப்பட்டன என்பதற்கு ஏதுவாக இலக்கிய மேற்கோள்களைத் தங்களுடைய உரையில் எவ்வாறு கையாண் டுள்ளனர் என்பதை விளக்குவதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

### மரபுப்பெயர்கள்

மரபுப்பெயர்களுக்கு அகராதி களில் 'ஒன்றற்குத் தொன்று தொட்டு வழங்கிவரும் பெயர்' (ப.852) என்று தமிழ் தமிழ் அகரமுதலி – மு.சண்முகப் பிள்ளையும், பாட்டும், தொகையும் சங்க இலக்கிய அகராதி மரபு (ப.8655) ஞா.தேவநேயப்பாவாணரும், தமிழ் லெக்சிகன்(3086) எஸ்.வையாபுரிப்பிள்ளையும் ஒரே பொருளைத் தருகின்றனர். மரபுப்பெயர்களுக்குத் திறனாய் வாளர்கள் பல வேறுபட்ட பொருளைக் கையாண்டுள்ளனர் என்பதை சி.இலக்குவனார் நூல்களில் மரபுநிலை திரியாத வாறு சொற்களை ஆளுதல் வேண்டும் என்பதை மரபு நிலையைக் கூறப்புகுந்தவர் நடப்பன, பறப்பனவற்றின் பெயர்களை இளமை, ஆண், பெண் என்று வகுத்துக் கொண்டு ஒவ்வொன்றுக்கும் உரியவற்றைக் குறிப்பிட்டுள்ளார் (தொல்காப்பிய ஆராய்ச்சி.ப.194) எனவும், தொல்காப்பியத்திற்கு இளம்பூரணர் கருத்துரை, பொருளுரை, மேற்கோள், விளக்கவுரை எனும் முறையில் உரையமைப்பு அமைத்துள்ளார் எனலாம். ஆனால் மரபியல் உரையமைப்பு மேற்கூறிய

*அமைப்பிலிருந்து மாறுபட்டு அமைவதை காணமுடிகிறது. அதாவது பொருளுரை மட்டும், கருத்து, பொருள் என்னும் நிலையிலும், கருத்து, பொருள், எ.கா என்னும் நிலையிலும், கருத்து, பொருள், எ.கா, விளக்கம் என அமைந்துள்ளதை (இளம்பூரணர் உரைநெறி, ப.32) ச.குருசாமி குறிப்பிடுகின்றார். இதேபோல் பேராசிரியர் உரைநெறி என்னும் நூலில் ச.குருசாமி (ப.50) பேராசிரியர் மரபியலில் இருதிணைப் பொருட்குணனாகிய இளமையும், ஆண்மையும், பெண்மையும் பற்றிய வரலாற்று முறைமையும், இருதிணைக்கும் உரிய இளமைப்பெயர்களைக் கூறிய நூலாசிரியர் முதுமைப் பெயர்களைப் பற்றி கூறாதது ஏன் என வினவி பெயர்க்காரணத்தை மட்டும் கூறியிருக்கின்றார் என்பதும், ந.சுப்புரெட்டியார் தன்னுடைய தொல்காப்பியம் காட்டும் வாழ்க்கை என்னும் நூலில் மரபுச்சொற்கள் உயர் திணை, அஃறிணை என்ற இரு திணையும் ஆண்பால், பெண் பால், ஒன்றன்பால், பலர்பால், பலவின்பால் என்ற ஐம்பாலும் பற்றி வரும் பொருள்களின் இளமைத்தன்மை, ஆண்மை, பெண்மை முதலிய இயல்புகளை புலப்படுத்தும் நிலையில் அமைந்தன (ப.405) என்னும் கருத்தை முன் வைப்பதிலிருந்து மரபுப் பெயர்களுக்கான விளக்கத்தினை நன்கு அறிய முடிகிறது.*

**இளமைப்பெயர்கள்**

*தொல்காப்பியர் இளமைப்பெயர் களாக ஒன்பது பெயர்களைக் குறிப்பிடுகிறார் என்பதை,*

மாற்றருஞ் சிறப்பின் மரபியல் கிளப்பிற்
பார்ப்பும் பறழும் குட்டியும் குருளையும்
கன்றும் பிள்ளையும் மகவும் மறியென்
றொன்பதும் குழவியொடு இளமைப்பெயரே
(தொல்.மரபு:545)

*இந்நூற்பாவினால் அறிய முடிகிறது. இப்பெயர்களுக்கு முட்டையிடுபவற்றின் இளமைப் பெயர் குஞ்சு என்றும், நேரடி யாக ஈனுபவற்றை குட்டி என்றும் வழங்குவர். குட்டி என்பது மக்களுக்கு உரியதாகும். சில உயிரினங்களின் இளமைப் பெயர் ஏதேனும் ஒரு அடைமொழி பெற்றும், பொதுப்பெயராகவும் வரும். (எ.கா) நரிக்கௌிறு, குட்டி விளா என்று உயர்தரத் தமிழ் இலக்கணம் என்னும் நூலில் தேவநேயப்பாவாணர் (ப.269) குறிப்பிடுகிறார். இதேபோல் இளமைப்பெயர்களில் மகவு, பிள்ளை, பறழ், பார்ப்பு என்பன குரங்குக்குட்டியைக் குறிக்கும். இக்காலத்தில் மக்களினத்துக் குரிய மகவு, பிள்ளை, குரங்கிற்கு வழங்கப்பட்டு இருத்தல் சிந்திக்கத்தக்கது. அதாவது குரங்கிலிருந்து மனிதன் தோன்றினான்*

என்ற கொள்கைக்கு அரண் செய்வதாகும். குழவி, மகவு இரண்டையும் தொல்காப்பியர் மக்களுக்குரிய பெயராகக் குறிப்பிட்டுள்ளார். பிள்ளை என்பது தற்கால வழக்கு பெயராகும். ஒட்டகத்திற்கு கன்று என்னும் பெயர் வழங்கப் பட்டுள்ளது என்பதும், ஒட்டகம் பாலைவன விலங்காக இருந் தாலும் தமிழ்நாட்டில் வளர்க்கப் பட்டது(ப.95) என்னும் செய்தியும் அறியமுடிகிறது.

ச.குருசாமி இளமைப்பெயர்கள் முறைவைப்பு தொல்காப்பியர் பார்ப்பு, பறழ், குட்டி, குருளை, கன்று, பிள்ளை, மகவு, மறி, குழவி என்று குறிப்பிட்டும், சிறப்புச் சூத்திர வைப்புமுறையாக பார்ப்பு, பிள்ளை, குட்டி, பறழ், குருளை, மறி, மகவு, கன்று, குழவி என்று மாற்றி குறிப்பிடுவதாகவும் அமைந்துள்ளது. ஆனால் இதற்கான காரணம் எதுவும் இளம்பூரணர் கூறவில்லை (ப.334). இளமைப்பெயர்களை பேராசிரியர் ஒன்பதையும் முறையாகக் கூறி நூலாசிரியர் விரித்தோதும்போது எண்ணு முறைக்கண் மாற்றி கூறுகிறார். அதாவது கன்று என்னும் இளமைப்பெயர் யானை, குதிரை, கழுதை, கடமை, ஆ, எருமை, மரை, கவரி, கராகம் என்று பத்து உயிரினத்தின் பெயரைக் குறிக்கிறது. ஒரே நூற்பாவில் குறிப்பிடாமல் நான்கு நூற்பாவில் குறிப்பிடுவது நூற்பா சுருக்கம் ஏற்பட்டு நூற்பா எண்ணிக்கை குறைந்திருக்கும் என்று எண்ணுவார்க்குத் தம் உரைத் திறனால் தெளிவுப்படுத்து கிறார் (ப.98).

இலக்கியங்களில் மேற் கோளாக இளம்பூரணர் இளமைப் பெயர் களுக்கு பார்ப்பு, பிள்ளை என்னும் இரு பெயர்களை மட்டும் நான்கு பாடல்களில் பறப்பன, தவழ்வன இவற்றிற்கு குறிப்பிட்டுள்ளார். ஆனால் பேராசிரியர் ஒவ்வொரு பெயருக்கும் இலக்கிய மேற்கோள் களை கையாண்டுள்ளார். மாறாக தொல்காப்பியரும், இளம்பூரணரும் குறிப்பிடும் 'போத்து' என்னும் ஆண்பாற் பெயரை இளமைப்பெயராகப் பேராசிரியர் சுட்டுவதையும் அறியமுடிகிறது.

யாமைப் பார்ப்பி னன்ன
காமங் காதலர் கையற விடினே

(குறுந்.152:4,5)

என்னும் பாடலானது குறிஞ் சித்திணையில் அமைந்துள்ளது. அதாவது ஆமையின் குஞ்சுகள் தன்னுடைய தாய்முகம் நோக்கி வளரும் என்று கூறி தலைவி தலைவன் மீது கொண்ட காதலை காமத்தை வெளிப் படுத்தவதாக இப்பாடல் அமைகிறது. இதேபோல் பார்ப்பு என்னும் இளமைப்பெயர் குரங்குக்குட்டியைக் குறிப் பிடுவதை,

ஓர்பன ஓர்பன உண்ணும்
பார்ப்புடை மந்திய மலையிறந் தோரே

(குறுந்.278:6,7)

இப்பாடலில் ஆண்குரங்கு மரத்திலிருந்து உதிர்த்த கனிகளில் பெண்குரங்கு இனிய கனிகளை தன் குட்டிகளுக்கு கொடுக்கும் இங்கு தலைவனுடைய நாட்டின் சிறப்பைக் குறிப்பிட பார்ப்பு என்னும் சொல் கையாளப் பட்டுள்ளது. மூங்கா, வெருகு, எலி, குரங்கு, அணில், நாய், பன்றி, புலி, முயல், நரி போன்ற பெயர்களை பறழ் என்னும் சொல் குறிப்பிடுவாகவும், இரவுக்குறி வரும் தலைவனை தோழி மறுத்துரைப்பதை,

கைம்மை யுய்யாக் காமர் மந்தி

கல்லா வன்பறழ் கிளைமுதற் சேர்த்த

(குறுந்.69:2,3)

இங்கு பறழ் என்பது குரங்குக் குட்டியையும் குறிப்பிட்டும், ஆண் குரங்கு இறந்ததால் பெண்குரங்கு தாவுதலை அறியாத தன் குட்டியை சுற்றத்தாரிடம் விட்டு சென்று உயிரை மாய்த்து கொள்ளும் இத்தகைய நாட்டையுடையவன் என்று கூறப்படுகிறது. கன்று என்னும் பெயர் யானை, குதிரை, கழுதை, கடமை, ஆ, எருமை, மரை, கவரி, கராம், ஒட்டகம் என்னும் பத்து பெயர்களுக்கு வழங்கப் பட்டுள்ளது.

கன்றுகா லொய்யுங் கடுஞ்;சுழி

புன்தலை மடப்பிடிப் பூசல் பலவுடன்

வெண்கோட்டி யானை விளிபடத் துழவும்

(அகம்.68:1719)

இங்கு கன்று என்பது யானைக் கன்று என்னும் பொருளையும், தலைவன் கடந்து வரும் வழியின் கொடுமையைக் காட்டுவ தாகவும் அமைகிறது. அடுத்து குழவி என்னும் பெயர் பசுவின் இளமையைக் குறிக்கிறது என்பதை,

மடக்கண் குழவி அணவற் தன்ன

நோயேம் ஆகுதல் அறிந்தும்

சேயர் தோழி! சேய்நாட் டோரே

(குறுந்.64:34)

இப்பாடல் காட்டுகிறது. பிரிவுத் துயரை வெளிப்படுத்துவதாகவும், தலைவியின் புலம்பலை வெளிக்காட்டுவதாகவும் அமைகிறது. இவ்வாறு இளமை என்பது ஒவ்வொரு உயிரினத்திற்கும் பொதுவானது என்பதும், தொல்காப்பியர் காலத்தில் வழக்கில் இருந்த பெயர்கள் காலபோக்கில் சில மாறுபட்டு அமைவதை காணமுடிகிறது. உதாரணமாக பார்ப்பு என்பதிலிருந்து பாப்பா தோன்றியதும், பிள்ளை என்னும் பெயர் ஆண், பெண் இரு பாலுக்கும் பொதுப்பெயராக அமைவதும், இக்காலத்தில் குழவி என்னும் பெயர் ஆட்டுக்குழவியைக் குறிப்பிடுவதும், மகவு என்னும் பெயர் மக்களுக்குரியதாக அமைவதையும் அறிய முடிகிறது.

**ஆண்பாற்பெயர்கள்**

தொல்காப்பியர் குறிப்பிடும் ஆண்பாற்பெயர்கள் அனைத் திற்கும் நூற்பா மட்டும்

பிரித்து கூறுகிறார். அதனை பின்பற்றி இளம்பூரணர் உரை அமைந்தும், இப்பெயர்களோடு ஆண், விடை என்னும் இரு பெயர்களைச் சேர்த்து பதினேழு பெயர்களாகச் சுட்டுகிறார். இவற்றிற்கு உதாரணம் எதுவும் குறிப்பிடவில்லை நூலாசிரியர். ஆனால் பேராசிரியர் ஒவ்வொரு பெயர்களுக்கும் உதாரணமும், அவற்றிற்கான விளக்கத்தையும் தன்னுடைய உரையில் கையாண்டுள்ளார். ஆண்பாற்குச் சிறப்புப்பெயர் பெறாத உயிரினங்களின் ஆண்பாலெல்லாம் ஆண் என்னும் அடைமொழி பெற்ற பெயராகக் குறிக்கப் பெறும் (எ.கா) ஆண் கரடி, ஆண் பல்லி என்று தேவநேயப் பாவாணர்(ப.270) குறிப்பிடுகிறார். ஏறு என்னும் ஒரு பெயர் மட்டுமே ஆண்பாலைக் குறிக்கப் பயன் படுத்தப்பட்டுள்ளது என்றும், இது விலங்குகளான பன்றி, புல்வாய், உழை, கவரி, எருமை, மரை, சுறா என்பனவற்றின் ஆண் இனத்தையும் குறிப்பிடக் கையாளப்பட்டுள்ளது(ப.196). இளம்பூரணர் உரைநெறி என்னும் நூலில் ஏறு, ஏற்றை, ஒருத்தல், களிறு, சே, சேவல், இரலை, கலை, மோத்தை, தகர், உதள், அப்பர், போத்து, கண்டி. கடுவன் என்னும் பதினைந்து பெயர்களைக் குறிப்பிட்டும் பிறகு ஆண், விடை என்பன குறிப்பிட்டாலும் அவற்றிற்கான காரணத்தைக் குறிப்பிடவில்லை.

இவை ஒவ்வொரு பெயர்களையும் விரித்துக் கூறும்போது இரு பெயர்களைச் சேர்த்து ஒரே நூற்பாவில் விளக்கிச் செல்லும் முறையையும் கையாண்டுள் ளார். ச.குருசாமி ஆண்பாற் பெயர்களில் பெரும்பான்மை ஏறு, ஏற்றை வருவதால் சிறப்புக் கருதி களிறு முதலில் முறை மாற்றி பொதுவிதி கூறு கிறார்(ப.220). களிறு என்பது ஆண் யானையைக் குறிக்கிறது என்பதை விளக்குவதாக கலித்தொகை பாடலொன்று அமைகிறது.

கால்வரை நில்லாக் கடுங்களிற் றொருத்தல்
யாழ்வரைத் தாங்கி யாங்குத் தாழ்புநின்

(கலி.2.:26,27)

இங்கு தோழி பிரிவு நேர்ந்தால் தலைவியின் அழகு கெடும் என்று அஞ்சி அங்குசத்திற்கு அடங்காத மதயானை யாழ் இசைக்கு வயப்படுவது போல அன்புடன் என் சொல்லுக்கு கட்டுப்பட்டுக் கிடக்கிறாள் என்று தலைவியின் நிலையை தலைவனுக்கு உரைப்பதாக பாலைத்திணையில் இப்பாடல் அமைந்துள்ளது. இதேபோல் தோழி கூற்று பாடலொன்றில் யானை ஒருத்தல் என்னும் பெயரால் சுட்டப்படுவதை,

கல்லூர் பிழிதரும் புல்சாய் சிறுநெறிக்
காடுமீக் கூறுங் கோடேந் தொருத்தல்

(அகம்.65:1516)

இப்பாடலில் காட்டைக் கூறுவதற்குக் காரணமாகிய உயர்ந்த கொம்புகளை உடைய யானை தலைவன் செல்லும் வழியைக் காவல் கொள்ளும் என்று சுரத்தின் கொடுமை கூறப்பட்டுள்ளது. அடுத்து போத்து என்னும் பெயர் பத்து விலங்கு களின் ஆணினத்தையும், தவழ்வனவற்றிற்கும் பயன் படுத்தப்பட்டுள்ளது. இது பொதுப் பெயராக அமை வதை,

முதலைப்போத்து முழுமீனாரும்

தண்துறை ஊரன் தேர்எம்

(ஐங்.5:4,5)

இங்கு போத்து என்பது ஆண் முதலை நன்கு வளர்ந்த முழு மீனின் உணவை உண்ணும் அத்தகைய வளமுடைய நாட்டுத் தலைவன் தலைவியைக் காண தேரில் வந்து தம் வீட்டு முற்றத்தில் நிற்க வேண்டும் என்று கூறி தோழி வரைவு வேண்டுவதாக இப்பாடல் அமைகிறது. இளம்பூரணரும், பேராசிரியரும் ஆண்பாற் பெயர்களோடு ஆண், விடை இரண்டையும் குறிப்பட்டாலும் இவையும் ஆண்பாற் பெயர் களாகக் கொள்ளலாம் என்னும் செய்தியைக் மட்டும் கூறி அவற்றிற்காக சான்றுகள் எதையும் குறிப்பிடவில்லை.

## பெண்பாற்பெயர்கள்

பேடையும் பெடையும் பெட்டையம் பெண்ணும்

மூடும் நாகும் கடமையும் அளகும்

மந்தியும் பாட்டியும் பிணையும் பிணவும்

அந்தஞ்சான்ற பிடியொடு பெண்ணே

(தொல்.மரபு.547)

தொல்காப்பியத்திற்கு பலர் உரை வகுத்துள்ளனர். ஒவ்வொரு காலக்கட்டத்திலும் உரை வந்து கொண்டே உள்ளது. ஒவ்வொரு உரையாசிரியர்களும் பெண்பாற்பெயர்களுக்கு வேறுபட்ட கருத்தினை முன் வைக்கின்றனர். இளம்பூரணர் ‘அந்தஞ்சான்ற’ என்பதற்கு ‘முடிவுப்பெறாத’ என்னும், ஆ, புல் என்பனவற்றையும் பெண்பாற் பெயர்களாகக் குறிப்பிடுகின்றார். இதேபோல் பேராசிரியரும் இக்கருத்தையே வலியுறுத்துகிறார். அதாவது ‘ஆ’ என்பது பசு என்றும், ஆண், பெண் என்பன புல் இனத்திற்கு பொதுவாக வழங்கப்படும் என்கிறார். வெள்ளைவாரணர் மட்டும் இவர்களுடைய கருத்திற்கு மாறாகச் சுட்டுவதை ‘அந்தஞ்சான்ற’ என்பது முடிபு. அதாவது ‘முடித்து கூறப்பட்ட’ ஆ, புல் என்பன ஒருகால் பெண்மைப்பெயராகும்(ப.15);. தொல்காப்பியர் பெண்பாற் பெயர்களாக பதின்மூன்று பெயர்களைச் சுட்டுகிறார் அவை பேடை, பெட்டை, பெடை, பெண், மூடு, நாகு, கடமை, அளகு, மந்தி, பாட்டி, பிணை, பிணவு என்பனவாகும். இங்கு ‘அந்தஞ் சான்ற’ என்பது ‘முடிவுபெற்ற’ என்னும் பொருளைத் தருகிறது என

இளம் பூரணரும், பேராசிரியரும் கூற தமிழண்ணல் மட்டும் 'முடிபு பெறாத' பெண், பிணவு என்னும் பெயர்கள் மட்டும் மக்களில் பெண்பாலைக் குறிக்கும், பாட்டி என்பது இன்று மக்களில் வயது முதிர்ந்த பெண்களையும், பெற்றோரின் தாயையும் குறிக்க இன்று வழங்கப்படுகிறது இவை உயர்பொருட்பேறு என்னும் நியதிக்கு உட்பட்டது என்று தொல்காப்பிய ஆராய்ச்சி(ப.197) என்னும் சி.இலக்குவனார் குறிப்பிடுகிறார். அடுத்து ச.குருசாமி ஆண்பாற் பெயரில் களிற்றினை முதலில் கூறியதால் பிடியினை பெண்பால் பெயரில் முதலாக எண்ணுமுறைக்கண் தொல்காப்பியர் குறிப்பிடுவதாக பேராசிரியர் உரை அமைவதைக் காணமுடிகிறது(ப.221). இளம் பூரணர் உரைநெறி என்னும் நூலில் (ப.336) தொல்காப்பியர் கூறும் நூற்பாக்களை விரித்தோதுமிடத்து இரண்டு பெயர்களுக்கு ஒரு நூற்பா குறிப்பிடுகிறார். பேராசிரியர் பெண்பாற்பெயர்கள் ஒவ்வொன்றுக்கும் இலக்கிய மேற்கோளைத் தன்னுடைய உரையில் கையாண்டு எளிமைப் படுத்தி விளக்குவதைக் காண முடிகிறது. பிடி என்னும் பெயர் யானையின் பெண்பாலை மட்டும் குறிப்பதை,

பிடிபடி முருக்கிய பெருமரப் பூசல்
விண்தோய் விடரகத் தியம்பும் அவர்கட்

(அகம்8:1112)

என்னும் இப்பாடல் குறிஞ் சித்திணையில் தலைவியின் புலம்பலை வெளிப்படுத்துவதாக அமைந்து ஆண்யானை குழியில் விழுந்ததைக் கண்டு பெண் யானை மரங்களை உடைத்து குழியில் நிரப்பி அவற்றை காப்பாற்ற முயற்சிக்கும் மிகுந்த ஒலியையும் எழுப்பும் அவ்வொலி அனைவருக்கும் கேட்கும்படி அமைவதையும், களவொழுக்கம் வெளிப்பட்டதையும் எண்ணி வருந்துகிறாள். இதேபோல் தோழி உடன்போக்கு வலியுறுத்து வதை,

அலங்கல் வான்கழை உதிர்நெல் நோக்கிக்
கலைபிணை விளிக்குங் கானத் தாங்கண்

(அகம்.129:4,5)

இப்பாடல் சுட்டுகிறது. காட்டில் கிளைகளையுடைய பெரிய மூங்கில் உதிர்த்த நெல்லை பார்த்து ஆண்மான் புல் மேய்தலை மறந்து நின்று தன் பெண்மானை அழைக்கும் என்று காட்டப்படுகிறது. பிணவு என்னும் பெயர் விலங்கினை குறிப்பிடுவதை,

மேன்புனிற் றம்பிணவு
பசிதெனப் பைங்கண்
சேந்நாய் ஏற்றை கேழல் தாக்க

(அகம்.21:1718)

இங்கு பிணவு என்பது பெண் நாயைக் குறிக்கிறது. பெண் நாயின் பசிக்காக ஆண்நாய், ஆண் பன்றியைத் தாக்கி உணவாகக் கொடுக்கும். அத்தகைய கொடுமையான சுரத்தின் வழியில் செல்லும்

தலைவன் தலைவியை எண்ணி தன் நெஞ்சினை ஆற்றுவிப்பதாக இப்பாடல் அமைகிறது. பேடை, பெட்டை, பெடை, அளகு போன்ற பெயர்கள் பறவைகள் அனைத்திற்கும் பொதுவாகப் பயன்படுத்தப்பட்டுள்ளது.

**முடிவுரை**

தொல்காப்பியத்தின் முதல் உரையாசிரியர் இளம்பூரணர். இளம்பூரணர் தம் உரையில் மிகச் சில உவமைகளையே எடுத்தாண்டுள்ளார். இவர் தன்னுரையில் தொல்காப்பியர் கருத்திற்கு மறுப்பு எதுவும் கூறவில்லை. பேராசிரியர், இளம்பூரணருடன் மாறுபட்டு உரை எழுதும் இடங்கள் சில உண்டு. பேராசிரியர் உரையால் மரபுப்பெயருக்கு விரிவான விளக்கம் கிடைத்துள்ளது எனலாம். தமக்கு முன் இருந்த உரையாசிரியர்களின் பெயரையோ, நூலாசிரியர்களின் பெயரையோ இவர் கூறவில்லை. கருத்துக்களை மட்டுமே கூறி மறுக்கின்றார். இளம்பூரணர் மிகச்சுருக்கமாக எழுதிச் சென்றுள்ள இடங்களையெல்லாம் பேராசிரியர் நன்கு விளக்கியுள்ளார். மரபுப் பெயர்களில் பெரும் பான்மையானவை இன்று வழக்கில் இல்லை. காலப் போக்கில் சில பெயர்கள் மட்டும் மருவி வந்துள்ளன எனலாம். சங்கப்பாடல்களில் மரபுப்பெயர்கள் தலைவன், தலைவி, தோழி, செவிலி, நற்றாய் என அகமாந்தர்களின் கூற்றுகளில் உவமையாகவும், உள்ளுறையாகவும், குறியீடுகளாகவும் பயன்படுத்தப் பட்டன என்பதும் அறிய முடிகிறது.

✪

## திருக்குறள் தூதர் சாந்தி மோகனராசு இயற்கை எய்தினார்



உலகத் திருக்குறள் மையத்தின் நிறுவனரும், அருள்திரு திருக்குறள் தூயர் பேராசிரியர் முனைவர் கு. மோகனராசு அவர்களின் துணைவியாருமாகிய திருக்குறள் நெறித்தோன்றல் திருக்குறள் தூதர், திருக்குறள் முனைவர் சாந்திமோகனராசு அவர்கள் 31.05.2017 அன்று இயற்கை எய்தினார்கள். அவருடைய இறுதிச் சடங்குகள் அனைத்தும் திருக்குறள் வழியில் நடைபெற்றன. அவருக்கான இரங்கல் கூட்டம் 17.06.2017 அன்று வள்ளுவர் கோட்டத்தில் நடைபெற்றது. அன்னாரை இழந்து வாடும் பேராசிரியர் அவர்களுக்கும் மையத்தினருக்கும் குடும்பத்தினருக்கும் இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

**ஆசிரியர்.**

வாழ்வியல் நோக்கில்

# முத்தொள்ளாயிரம்

## முன்னுரை

அகம், புறம் என்ற இரு பண்புகளை கொண்ட முத்தொள்ளாயிரமானது இலக்கிய வரலாற்றில் ஒரு பெரும் பங்கினை வகிக்கின்றது எனலாம். கால மாறுதலில் பதிவு பெறுகின்ற நிலையில் உள்ள இம்முத்தொள்ளாயிரமானது பல மாறுபட்ட கருத்துக்களைப் பெற்றுள்ளது. மூவேந்தர்களின் சிறப்புக்களைக் கூறும் ஒரு வரலாற்றுப் பெட்டகமாக முத்தொள்ளாயிரம் திகழ்கிறது. இலக்கியங்கள் பெரும்பாலும் அதன் அதன் வாழ்வியலைத் சுட்டிக் காட்டுவதைப் போலவே முத்தொள்ளாயிரமும் வாழ்வியலின் ஒரு அங்கமாகத் தோன்றுகிறது. அத்தகைய வாழ்வியல் சிந்தனை இந்நூலில் எவ்வாறு இடம்பெற்றுள்ளது என்பதை ஆராய முற்படுகிறது இக்கட்டுரை.

## முத்தொள்ளாயிரம்

முத்தொள்ளாயிரம் முடியுடைய வேந்தர்களாகிய சேர, சோழ, பாண்டியரைப் பற்றிய பாடல்களை உடையது. இந்நூல் மூன்று வேந்தர்களையும் தனித்தனியே 900 பாடல்கள் வீதம் 2700 பாடல்களாகப் பாடப்பெற்றது என்பது ஒரு சாரர் கருத்து. ஆனால் தற்போது 109 பாடல்கள் மட்டுமே கிடைத்துள்ளன. முத்தொள்ளாயிரத்தை இயற்றிய புலவர் பற்றிய குறிப்புகள் ஏதும் கிடைக்கவில்லை. இந்நூல் கி.பி 5 ஆம் நூற்றாண்டுக்கும் 8 ஆம் நூற்றாண்டுக்கும் இடைப்பட்ட காலத்தில் இயற்றப் பெற்றிருக்கலாம் என அறிஞர்கள் கருதுவர். முத்தொள்ளாயிரத்தில் மூவேந்தர்களை அவர் அவர்களின் பொதுப் பெயர்களாலே குறிக்கப்படுகின்றன. இதுவே இந்நூலின் தனித்தன்மைகளாக கருதப் பெறுகின்றது. இந்நூலில் உள்ள 109 பாடல்களும் புறத்திரட்டு என்ற நூலிலிருந்தே திரட்டப்பெற்றன. முத்தொள்ளாயிரம் முழுவதும் மக்களின் வாழ்வியலைக் கூறும் நூலாகவே திகழ்கின்றது.

## முத்தொள்ளாயிரத்தின் சிறப்பு

முத்தொள்ளாயிரம் செவ்வியல் இலக்கியங்களில் ஒன்றாக

**வே. பூர்ணா,**
முனைவர்பட்ட ஆய்வாளர்,
பெரியார் பல்கலைக்கழகம்
சேலம் 636 011.

உள்ளது என்பது அனைவரும் அறிந்த ஒன்றாகும். முத்தொள்ளாயிரம் தொன்மை, தனித் தன்மை, பொதுமைப்பண்பு, நடுவு நிலைமை, தாய்மைத்தன்மை, பண்பாடு, கலைபட்டறிவு, வெளிப் பாடு பிறமொழி தாக்க மில்லாத தன்மை, இலக்கிய வளம், உயர்சிந்தனை, கலை இலக்கியத் தனித்தன்மை வெளிப்பாடு. பங்களிப்பு, மொழிக்கோட்பாடு போன்ற *11* தொகுதிகள் செவ்வியல் மொழிக்குரிய தகுதிகளை முத்தொள்ளாயிரம் பெற்றுள்ளது என்பதை அறியமுடிகிறது இதுவே முத்தொள்ளாயிரத்தின் தனிச்சிறப்பாகும்.

### உலா வரல்

சேர மன்னன் உலா வந்தபோது, அவ்வுலாவைக் காணவிடாது, தாய்மார்கள் வீட்டின் கதவை அடைத்ததும் இளம்பெண்கள் கதவைத் திறந்ததுமாகிய நிகழ்வினால் கதவு தேய்கிறது என்கிறார் ஆசிரியர்.

“தாயர் அடைப்ப மகளிர் திறந்திடத்
தேயத் திரிந்த குடுமியவே – ஆய்மலர்
வண்டுலாஅங் கண்ணி
வயமான்றேர்க் கோதையைக்
கண்டுலாஅம் வீதிக் கதவு”

(பா.10)

உலாக் காட்சியினால் கதவு தேய்ந் தமையை அழகுறக் காட்சிப் படுத்தியுள்ளார் ஆசிரியர்.

### அலைபாயும் நெஞ்சு

கோதை எனும் பெயர் கொண்டு சேர மன்னனைக் காணக் கதவருகே சென்றாள் தலைவி. நாணம் கொண்டாள் செல்வம் இருப்பவரிடம் பொருள் கேட்கச் செல்லும் வறுமை உற்றவர் போல, நெஞ் சமானது ஆவலினால் கதவை நெருங்குவதும், நாணத்தால் பின்வாங்குவதுமாக தலைவி இருந்ததை ஆசிரியர் விளக்கி சென்றுள்ளார்.

“பெருஞ்செல்வர் இல்லத்து
நல்கூர்ந்தார் போல
வருஞ்செல்வம் பேருமென் நெஞ்சு”

(பா.16)

### நோய் நீங்காமை

சேர மன்னம் மீது காதல் கொண்டு அவனால் ஏற்பட்ட காதல் நோயானது, வெறியாட்டி நீராட்டினால் மட்டுமா நீங்கும் இல்லை நீங்காது என்று தலைவி கூறுகிறாள்.

“....................
நீராட்டி நீங்கென்றால்
நீங்குமோ – போராட்டு
வென்றங் களங் கொண்ட வெஞ்
சினவேற் கோதைக்கென்
னெஞ்சங் களங் கொண்ட நோய்”

(பா.20)

தலைவனால் மட்டுமே இக்காம நோய் நீங்கும் என்று தலைவி தோழியிடம் கூறுகிறாள். தலைவியின் காதல் நோய் அறியாத தாயின் செயலை இப்பாடல் விளக்குகிறது.

## சிறப்புரைத்தல்

*சேரனைப் பலவாறு பாராட்டு கிறார் ஆசிரியர் இதனை, உலா வரக் கண்ட சேரன் மீது மயங்கிய பெண்ணொருத்தி கூறுவதாகக் குறிப்பிடுகிறார்.*

*உலாவரும் இவன் இந்திரன் எனில் ஆயிரம் கண் இருத்தல் வேண்டும். ஆனால் இவனுக்கு இரு கண்ணே. உலகாளும் சிறப்பால் இவன் சேரன் கோதை என்றுக் கூறுவதே சிறப்பு என்கிறாள் தலைவி.*

"இந்திரன் என்னின்
இரண்டே கண் ஏறூர்ந்த
அந்தரத்தான் என்னிற்
பிறையில்லை – அந்தரத்துக்
கோழியான் என்னின் முகன்
ஒன்றே கோதையை
ஆழியான் என்றுணற் பாற்று"

(பா.23)

*இப்பாடலின் வழி தலைவியின் எண்ணத்தையும் சேரனின் பெருமையும் அறியமுடிகிறது.*

## திறை செலுத்துவதற்கான காரணம்

*சோழ மன்னனுக்குத் (வளம் நிறைந்த உறையூரின்) திறை செலுத்தும் மன்னர்களின் பாதம் பணிந்து வணங்கியபோது அவர்களின் மணிமுடி அழுந்திய தாம். அதனால், பாதங்கள் புண்ணானதாம். அதனால் பலரால் திறை செலுத்த இயல வில்லை. சோழன் காக்க வைக்கும் தன்மையிலான். புண் பட்டிருப்பதால் காலம் தாழ்த்த வேண்டிய நிலை என்கிறார்.*

"நின்றீமின் மன்னீர்;
நெருநற்றிறை கொணர்ந்து
முன்றந்த மன்னர்
முடிதாக்க இன்றுந்
திருந்தடி புண்ணாகிச் செவ்வியிலனே
பெருந்தண் றுறந்தையார் கோ"

(பா.29)

*இப்பாடலின் வழி காத்திருந்து வரி செலுத்துங்கள் என்பதன் வழி சோழனின் பெருமையை அறியமுடிகிறது.*

## யானைச் சங்கிலியும் மங்கல நாணும்

*கிள்ளி வளவனுடைய யானை யின் போர்த்திறனை ஒருவன் பிறிதொருவனிடம் பின்வருமாறு எடுத்துரைக்கிறான். சோழன் கிள்ளிவளவனுடன் நட்புக் கொள்ளாத பகை மன்னர்களின் மனைவியர்களின் மங்கல நாணானது அறுபடும். இதற்கு யானைக் கால் எடுத்து வைக்கும் போது காலில் கட்டப் பட்டிருக்கும் சங்கிலியின் பிணைப்பு மட்டும் அறுபடாதாம் என்கிறார் புலவர்.*

"கானிமிர்த்தால் கண்பரிய
வல்லியோ புல்லாதார்
மானனையார் மங்கல
நாண் அல்லவோ"

(பா.32)

*என்று யானையின் வலிமையை உரைப்பதுபோல கிள்ளி வளவ னுடைய போர்த்திறனை உணர்த்தியுள்ள ஆசிரியரின் திறனை அறியமுடிகிறது.*

**சோழனின் வெற்றியினை உரைத்தல்**

இறைவனாகிய திருமாலானவன் எம்முயற்சியும் இன்றி நிலம் அளக்க, சோழனோ தன் முயற்சியால் வெற்றி பெற்றான் என்கிறதை முத்தொள்ளாயிர பாடலானது,

"தேரடிக்கூர் வெம்படையால்
காப்பதுஉம் செங்கண்மால்
ஓரடிக்கீழ் வைத்த உலகு"

(பா.41)

இதன் மூலம் சோழனின் முயற்சியையும், படை வலிமையையும் உணர முடிகிறது.

**கொடைத்திறம்**

சோழன் கிள்ளிவளவன் தான் பிறந்த ரேவதி நட்சத்தித்தன்று அந்தணர்களுக்கு பசு, பொன், புலவர்களுக்கு யானை பொற்காசு ஆகியவற்றைக் கொடையாக அளித்தான். அந்த நாளன்று அனைவரும் மகிழ்வாக இருக்க ஊரார் இல்லமும், ஊரும் சுத்தமாகவும் இருக்க ஒட்டடை அடித்ததால் சிலம்பிப் பூச்சி தன் கூடு இழந்து வருந்தியது என்ற நிகழ்வை முத்தொள்ளாயிர பாடல் அடிகளாவது பின் வருமாறு,

"அந்தணர் ஆவொடு
பொன்பெற்றார் நாவலர்
மந்தரம்போல் மாண்ட
களிறூர்ந்தர் எந்தை
இலங்கிலைவேற் கிள்ளி
இரேவதிநாள் என்னோ
சிலம்பிதன் கூடிழந்த வாறு"

(பா.44)

இதன் மூலம் சோழனின் பிறந்த நாளன்று கொடையளிக்கும் பாங்கினைத் தெளிவாக உணர முடிகிறது.

**கண்குளிரக் காண்க:**

உலா வரும் சோழனைக் கண்ணாரக் கண்டு மகிழுங்கள், அக்காட்சியைப் பெண்கள் காண கதவினைத் திறந்து இடம் கொடுங்கள் என்பதைப் பின்வரும் பாடல் உணர்த்துகிறது,

"திறந்திடுமின் தீயவை
பிற்காண்டும் மாதர்
இறந்து படிற்பெரிதாம்
ஏதம் உறந்தையர்கோன்
தண்ணார மார்பிற்
றமிழ்நர் பெருமானைக்
கண்ணாரக் காணக் கதவு"

(பா.47)

வீட்டுக்குள் அடைக்கப்பெற்ற பெண்கள் சோழனைக் காணாத ஏக்கத்தில் இறந்துவிட்டால் பின்பு அதனால் வரக்கூடிய பழி பெரியதாகும் என்று ஆசிரியர் உரைக்கின்றார்.

**தடுக்கும் நாணம்**

உலா வரும் சோழனைப் பார்க்க இயலவில்லை நாணம் தடுக்கிறது என்கிறாள் ஒருத்தி

"கனவினுள் காண்கொடாக்
கண்ணுங் கலந்த
நனவினுள் முன்விலக்கு நாணம்"

(பா.52)

சோழனைக் கனவில் காண இயலாதவாறு கண்கள் உறக்கத்

*தால் இடைமுடின. நேரில் காணலாம் எனில், நாணம் தடுக்கிறது எனக் காணமுடியாத துயரத்தை எடுத்துரைக்கிறாள்*

*பெண்ணொருத்தி பெண்மைக்கே உரிய நாணத்தை இப்பாடல் பதிவு செய்துள்ளதை காண முடிகிறது.*

**சொன்னசொல் மாறிய அன்னை**

*தலைவி இளம்பருவத்தில் இருக்கும்பொழுது சோழனுக்கு மணம் செய்து கொடுப்போம் என்று கூறிய அன்னை, தற்போது அவனைக் காணக்கூடாது என்று தடைவிதிக்கிறாளே என்ற தலைவின் வருத்தத்தை இப்பாடலானது,*

“குதலைப் பருவத்தே
கோழிக்கோ மானை
வதுகை பெறுகென்றா
ளன்னை — யதுபோய்
விளைந்தவா வின்று
வியன்கானல் வென்டேர்த்
துளங்குநீர் மாமருட்டி யற்று”

(பா.59)

*அகன்ற பாலை நிலத்தில் காணப் பெறும் கானல் நீர் அங்கிருக்கும் விலங்குகளுக்கு, நீராகக் காட்சி தந்து அருகே வரவர வெட்ட வெளி யாகக் காண்பது போல ஒத்திருக்கிறது என் நிலை என்கிறாள் தலைவி.*

**நம்பிக்கை**

*பாண்டியன் தான் பிறந்த நட்சத்திரமான உத்திராடப் பிறந்த நாளன்று கோபம் கொண்டு போரிடான் என்ற நம்பிக்கையைப் பின்வரும் பாடல் குறிப்பிடுகிறது.*

“கண்ணார் கதவந்
திறமின் களிறொடுதேர்
பண்ணார் நடைபுரவி
பண்விடுமின் - நண்ணாதீர்
தேர்வேந்தன் றென்னன்
திருவுத்தி ராடநாட்
போர்வேந்தன் பூசலிலன”;

(பா.75)

*யானை, குதிரை, தேர்ப் படை களை இயல்புக்குக் கொணருங் கள், பிறந்தநாள் ஆதலின், பாண்டியன் போரிடான் என்பதை இப்பாடல் வழி அறிய முடிகிறது.*

**கற்பனைத்திறம்**

*பெண்கள் தங்கள் கணவர் களோடு ஊடல் கொண்டு உதிர்த்த சந்தனமும் குங்குமமும் சேறாகி அவ்வழியே நடந்து செல்வோரைத் தடுமாறச் செய்கிறதாம் இக்கற்பனைக் காட்சியைப் பின்வரும் பாடல் படம்பித்துக் காட்டுகிறது.*

“மைந்தரோ டூடி மகளிர் திமிர்ந்திட்ட
குங்கும ஈர்ஞ்சாந்தின்
சேறிமுக்கி எங்குந்
தடுமாற லாகிய
தன்மைத்தே தென்னன்
நெடுமாடக் கூட லகம்”

(பா.77)

*நகரச் சிறப்பையும், குங்குமச் சேற்றின் நிலையினையும் அழகிய கற்பனைத் திறத்துடன் படைத் தளித்துள்ளார் ஆசிரியர்.*

## பணிவின் சக்தி

*பகை மன்னர்களின் மனைவியர், பாண்டியனின் கோபம் தீர்க்க, தம் இளம் புதல்வர்களைப் பாதம் பணிந்து வணங்கும்படி உரைப்பர். இதனால் பாண்டியனின் கண் சிவப்பும், கோபமும் தணியும் என்கிற முத்தொள்ளாயிர பாடல் பின்வருமாறு,*

"தொழில் தேற்றாப் பாலகனை
முன்னிறீஇப் பின்னின்
றழலிலைவேல் காய்த்தினர்
பெண்டிர் கழலடைந்து
மண்ணிரத்த லென்ப
வயங்குதார் மாமாறன்
கண்ணிரத்தந் தீர்க்கு மருந்து"

(பா.91)

*சினம் கொண்ட பாண்டிய மன்னனின் கோபம் தீர்க்கும் வழிமுறைகளை இதன்வழி எண்ணமுடிகிறது.*

## கூடல் இழைத்தல்

*பாண்டியன் மீது கொண்ட காதல் நிறைவேறுமா என்று தலைவி கூடல் இழைத்துப் பார்த்தலைப் பின்வரும் பாடல் சுட்டுகிறது.*

"கூடற் பெருமானைக்
கூடலார் கோமானைக்
கூடப் பெறவேனேல்
கூடென்று கூடல்
இழைப்பாள் போற் காட்டி
யிழையா திருக்கும்
பிழைப்பிற் பிழையாக் கறிந்து"

(பா.99)


*கூடல் சுழியே கூடவேண்டும் என்று வேண்டகிறாள் தலைவி. பாண்டியன் நினைவால் கண் துயிலாது இருப்பதை உரைக்குமாறு வேண்டுகிறாள் தலைவி.*

## தொகுப்புரை

- *முத்தொள்ளாயிரம் மூவேந்தர்களின் சிறப்பைக் கூறும் ஒரு ஒப்பற்ற இலக்கியமாகும்.*
- *வெண்பா யாப்பில் அமைந்தது. இனிமையும் கருத்துச் செறிவு மிக்கனவாக முத்தொள்ளாயிரப் பாடல்கள் இலங்குகின்றன.*
- *வாழ்வியலின் சிந்தனையை இந்நூல் சிறப்பாக வலியுறுத்து கின்றன.*
- *சேர, சோழ, பாண்டியன் எனும் மூவேந்தர்களின் புகழ், கொடை, சிறப்பு, வெற்றி, போர்த்திறம், உலாவரல், மகளிர் காதல் கொள்ளல் எனும் உயர் நிலைகளில் முத்தொள்ளாயிரப் பாடல்கள் அமைந்துள்ளன.*
- *வாழ்வியல் நோக்கில் முத்தொள்ளாயிரப் பாடல்கள் அமைந்து நெறிப்படுத்தி வாழ்வியலின் சிந்தனைக்கு சிறப்பு சேர்க்கும் விதமாக அமைகின்றன.*

✪

# சரித்திர நாயகன்



**முனைவர் மோ.ஜ. மகேஸ்வரி,**
இணைப்பேராசிரியர், தமிழ்த்துறை
ஸ்ரீ சாரதா மகளிர் கல்லூரி (தன்னாட்சி)
சேலம் 16.

இராமர் பாதம் பதித்த
இராமேஸ்வரத்தில் அவதரித்தவர்
இளமையில் வறுமையில் வாடினாலும்
வேதியியல் பாடத்தை விரும்பி படித்தவர்
இசுலாமிய மதத்தினர் விரும்பி
உண்ணக்கூடிய மாமிசத்தை துறந்தவர்
இன்றைய, இளைஞர்கள் விரும்பாத
பிரம்மசாரி விரதத்தைக் கடைப்பிடித்தவர்
விஞ்ஞானியாகி தான் படித்த திருச்சி

தூயவளனார் கல்லூரிக்குப் பெருமை சேர்த்தவர்
அனைவரிடத்தும் அன்பு, கருணை, மனிதநேயம் காட்டும்
நல் உள்ளம் படைத்தவர்
இந்தியா வல்லரசு நாடாக வளரும்
என்ற நம்பிக்கை விதையை விதைத்தவர்
இளைஞர்கள் இலட்சியம் அடைவதற்கு
கனவு காண ஊக்குவித்தவர்
வெற்றியினால் மீண்டும் முயற்சிக்க மாட்டோம்
தோல்வியினால் விடாமுயற்சி செய்வோம்
என்ற நம்பிக்கையை ஊட்டியவர்
தேசப்பிதாவைப் போன்று ஆடம்பரம் விரும்பாத
காட்சிக்கு எளியவர்
ஏவுகணை பிற நாட்டை அழிப்பதற்கல்ல
நம் நாட்டின் பாதுகாப்புப் பெட்டகம் என அறிவித்தவர்
இவர் அக்கினிச்சிறகு படைத்த
விஞ்ஞானி மட்டுமல்ல
தமிழ் ஞானி, மெய் ஞானி
இவர் சரித்திரத்தில் மட்டும் இடம்பிடிக்கவில்லை
அனைவர் உள்ளத்திலும் இடம் பிடித்தவர்.
மாணவர்களுக்கு உரையாற்றும் போது
உயிர் பிரிய ஆசைப்பட்டவர்
அவ்வாறே தன்னுயிரை நீத்தவர்
இத்தகைய பண்பாளர்
விஞ்ஞானம் வாழும் மட்டுமல்ல
உலகம் இருக்கும் மட்டும்
ஆ.பெ.செ அப்துல்கலாம் புகழ்
நிலை பெற்றிருக்கும்.

✪

### கம்பன் காட்டும்

# திருப்புமுனைக் கதாப்பாத்திரங்கள்

**செ. சக்திகலா,**
முனைவர்பட்ட ஆய்வாளர், தமிழ்த் துறை,
பெரியார் பல்கலைக்கழகம்
சேலம் 636 011.

கம்பராமாயணத்தின் உயர்நிலைப் பண்பாகப் பாத்திரப்படைப்பு அமைகின்றது. முன்னுக்குப் பின் முரணின்றிக் காப்பியம் முழுவதிலும் நிகழ்ச்சிகளில் பங்கேற்றுக் கதையை வளர்த்துச் செல்கின்ற முதன்மைப் பாத்திரங்களும் உண்டு, கதை நிகழ்ச்சிகளின் இடையில் தோன்றி ஏதேனும் ஒரு செயலைச் செய்த பின்னர் மறைந்து விடும் துணைப் பாத்திரங்களும் உண்டு எனலாம். எத்தகைய பாத்திரமாயினும் அப்பாத்திரம் பற்றிய கதையைக் கேட்போர், கற்போர் உள்ளத்தைக் கவரும் வகையில் பாத்திரப் படைப்புக் கலையில் ஒப்பற்று விளங்கும் பெருமைமிக்க புலவர்களில் கம்பரும் ஒருவர் என்றால் மிகையாகாது. கம்பருடைய திருப்புமுனைப் பாத்திரப் படைப்பு நெறிகளையும், நோக்கங்களையும் சுட்டிக் காட்டும் முறையில் இக்கட்டுரையினைக் காண்போம்.

**பாத்திரங்களின் அமைப்பு:**

கதையமைப்பிலும் நிகழ்ச்சிப் போக்குகளிலும் கம்பராமாயணம் விரிந்த எல்லைகளையுடையதாகவும், பாத்திரங்கள் அளவில் மிகுந்தும் இருப்பதை நாம் அறியலாம். பாத்திரங்கள் ஒரே வகையானவையாக இருப்பதில்லை. அவற்றுள் மனித இயல்புள்ள பாத்திரங்களும் உள்ளன. அரக்கர், வானரர் முதலிய பாத்திரங்களும் உள்ளன. இதில் காப்பியத்தின் திருப்புமுனைக் கதாப்பாத்திரங்களான மந்தரை, கைகேயி, சூர்ப்பணகை, மாரீசன் இவர்களைச் சிறப்பாக படைத்திருப்பதோடு பொருத்தமான இடத்தில் பொருத்தமான முறையில்

அறிமுகப்படுத்தி இராம கதையின் வளர்ச்சி முழுவதற்கும் உள்ள கருவாகப் படைத்திருப்பதின் மூலம் காப்பியச் சிறப்பை உணர முடிகிறது.

அரிஸ்டாட்டில் பாத்திரப் படைப்புக்குத் தேவையான நான்கு அடிப்படை நிலைகளைக் கூறுவதாக அ. பாண்டுரங்கன் குறிப்பிடுவ தாவது,

- ❖ ஒரு பாத்திரம் மனத்தைக் கவரும் வண்ணம் நல்ல முறையில் அமைய வேண்டும். (It must be good)
- ❖ அது பொருத்தமாகப் புனையப்பட வேண்டும். ஒவ்வொரு பாத்திரமும் ஒரு நோக்கத்திற்காகப் படைக்கப்படுகிறது. அந்த நோக்கம் இங்கும் பொருத்தம் எனப்படு கிறது. (Propriety)
- ❖ வாழ்க்கையில் நாம் காணக் கூடிய பாத்திரமாக இருத்தல் வேண்டும்.
- ❖ முன்னுக்குப் பின் முரணின்றிப் படைக்கப் படுதல் வேண்டும். நாடக நிகழ்ச்சிகளைத் தேர்ந் தெடுத்து அமைத்துக் கொள்ள வேண்டும். பாத்திரத்தின் செயலும் பேச்சும் அப்பாத்திரத்தின் இயல்புக்கு ஏற்றதாகவும், நம்பத் தக்கதாகவும் அமைதல் வேண்டும். (S.H. Butcher 1972 53-53) *(ப. 142)* என்று எடுத்துக் கூறுவதில் இருந்து கதையமைப்பில் பாத்திரங்களின் பங்களிப்பைப் பற்றி நாம் அறியமுடிகிறது.

காப்பிய நிகழ்ச்சிகளின் போக்கைத் தம் செயல்களால் மாற்றி அமைக்கின்ற பாத்திரங்கள், திருப்பு முனைப் பாத்திரங்கள் எனலாம். கூனி, கைகேயி, சூர்ப்பணகை, மாரீசன் எவ்வாறு இராமாயணக் கதைப் போக்கை மாற்று கின்ற வர்களாக திகழ்கின்றனர் என்பதை கம்பர் படைப்பில் நாம் அறிய முடியும். இக் கட்டுரை வழி கூனியின் சூழ்ச்சியால் நிகழும் திருப்பு முனை குறித்து மட்டும் விளக்கப்படவுள்ளது.

**திருப்புமுனைப் பாத்திரங்களுள் கூனி மந்தரை**

கம்பர் "உள்ளமும் கோடிய கொடியாள்" (1489) ஆகிய கூனி என்பார். அயோத்தியா காண்டத்திலேயுள்ள இரண்டாவது படலமாகிய மந்நதரை சூழ்ச்சிப் படலத்தில் காணப்படுகிறாள். கூனியின் பாத்திரப்பண்பை, உலகத்தில்

இப்படியும் ஒரு சிலர் உண்டு என்பதற்கு ஏற்ப அமைத்துள்ளார். இவள் கைகேயினிடம் சென்று மிக மென்மையாகப் பேசி, அவள் மனத்தைக் கலைத்து, இராமன்பால் கொண்டிருந்த ஆழ்ந்த அன்பைத் திரிந்து, கைகேயி தசரதனிடம் பெற்ற வரங்களின் மூலமாக இராமன் காடாளவும், பரதன் நாடாளவும் செய்து விடுகிறாள் என்பதோடு இந்தப் படலம் முடிந்து விடுகின்றது. இதனை அயோத்தியா காண்டத்தில் (1441 - 1470) 32 பாடல்களில் மந்தரையின் சாதுரியமான சூழ்ச்சியுரையினை அறியலாம்.

## முடிசூட்டு விழாவினைத் தடைபடுத்துதல்

இராமனின் முடிசூட்டு விழாவினை முன்னிட்டு அயோத்தி பொன்னகரம் போலச் செல்வம், அழகு மற்றும் இன்பங்களால் குறைவின்றி இருப்பதனைத் தேவர்கள் தம் பொன் நகரமோ என்று வினவி நின்றனர் என (36 முதல் 46) பத்துப் பாடல்களில் நகரின் அழகைக் கம்பர் சிறப்பித்துள்ளார். நகரின் அழகையும் மக்களின் மகிழ்ச்சியையும் கண்டு கூனி (மந்தரை) கொண்ட கோபத்தின் நிலைப்பாட்டை கம்பர்,

"இன்னல் செய் இராவணன்
இழைத்த தீமைபோல்,
துன்ன அருங் கொடு மனக்
கூனி தோன்றினாள்"
(மந்தரை சூ. - படலம் 47)

என்றும்,

"தோன்றிய கூனியும்
துடிக்கும் நெஞ்சினாள்,
ஊன்றிய வெகுளியாள்,
உளைக்கும் உள்ளத்தாள்"
(ம.சூ. படலம் 48)

என்றும் கூனி மனம் வெதும்பிச் சீறி நின்றமையை இங்ஙனம் எடுத்துக்காட்டுகிறார்.

தங்களுக்குத் தீங்கு இழைக்கப் பட்டால் அதற்குப் பழிவாங்க வேண்டுமென்ற எண்ணத்தில் தீங்கு செய்வது ஒருமுறை; இன்னொன்று எவ்விதக் காரணமும் இல்லாமல் பிறருக்குத் தீங்கு செய்தல் என்பது இன்னொரு சிலரின் எண்ணமாக அமைவதை நடைமுறையில் காண்கிறோம். இதில் மந்தரையின் கலகத்துக்குப் பொருத்தமான காரணம் எதுவும் இல்லை என்றாலும் கொடுமை மிக்க அவள் தன் செயலக்குக் காரணம் தேட முனைகின்றாள் எனலாம். சிறுவனாக இருந்த போது தன் முதுகில்

*இராமன் உண்டையால் (மண்ணுருண்டை) அடித்ததை நினைவு கூர்ந்து (ம.சூ.48) அச்செயலையே தான் செய்ய விருக்கும் கொடுமைக்குக் காரணமாகக் காட்டுவதாகக் கம்பர்,*

பண்டை நாள் இராகவன்
பாணி வில் உமிழ்
உண்டை உண்டதனைத் தன்
உள்ளத்து உள்ளுவாள்
(ம.சூ.48)

*என்பார்.*

*கைகேயின் மனத்தைத் திரிக்கும் சூழ்ச்சியில் இறங்குகிறாள் மந்தரை, "வாழ்ந்தனள் கோசலை" என்று கைகேயினிடத்து கூறுகின்றாள். இராமன்பால் அன்பு பெருகிய கைகேயி,*

மன்னவர் மன்னனேல்
கணவன், மைந்தனேல்
பன்ன அரும் பெரும்
புகழ்ப் பரதன்; பார்தனில்
என் இதன்மேல் அவட்கு
எய்தும் வாழ்வு ! என்றாள்
(ம.சூ.படலம் 57)

*இதற்கு பதில் கூறும் கூனி,*

கோடிய வரி சிலை
இராமன் கோமுடி
சூடுவன் நாளை; வாழ்வு இது
எனச் சொல்லினாள்
(ம.சூ. படலம் 58)

*கைகேயி மகிழ்ந்து மாலை பரிசளிக்கின்றாள், அம்மாலையை எறிந்த மந்தரையின் நிலையைக் கம்பர்,*

தெழித்தனள்; உரப்பினள்;
சிறு கண்தீ உக
விழித்தனள்; வைத்தனள்;
வெய்து உயிர்த்தனள்;
...........................................
அப்பொன் மாலையால்
குழித்தனள் நிலத்தை
அக் கொடிய கூனியே
(ம.சூ. படலம் 61)

*என்பார்.*

*கைகேயின் செயலால் மந்தரை வெகுண்டு பலவாறு சினந்து கைகேயி பரதன் ஆகிய இருவரின் எதிர்காலம் கருதி பேசுபவளாக கம்பர்.*

வேதனைக் கூனி, பின்
வெகுண்டு நோக்கியே,
பேதை நீ பித்தி; நிற் -
பிறந்த சேயொடும்
நீ துயர்ப் படுக, என்று தன் வஞ்
சனை மறைத்து

*நலம் விரும்பியாக தன் வாதத்தை எடுத்துரைப்பதாக (62 முதல் 71) 9 பாடல்களில் குறிப்பிடுகிறார்.*

*மந்தரையின் உரையினை ஒருவாறு மறுத்தும் கோபம் கொண்டும் பேசிய கைகேயிடத்து மேலும் கூறுகின்றாள். தயரதன்*

*இருக்கும் பொழுது இராமன் அரசாளலாம் என்றால், வயதில் மூத்த இராமன் இருக்கும் பொழுது பரதன் ஏன் அரசாளக் கூடாது என்பது கூனியின் வாதம், மந்தரை தன் சொற் சாதுர்யத்தால் கைகேயியை வளைக்கின்றாள் மேலும்*

*கொடுத்து ஒழிந்தனை உனக்கு அரும் புதல்வனை; இளர் நீர் ......... (84)*

*என்று இராமனுக்குப் பின் பரதன் ஆள்வான் என்று நினைத்தாயாயின் அதுவும் இயலாது என்றாள் கூனி இப்பொழுதே பரதனை அரசன் ஆக்குவதே விவேகம்; இல்லையேல் எப்போதும் பரதன் அரசனாக இயலாது என்று கூறி முடிக்கின்றாள். இறுதியாக மனமாற்றம் அடைந்த கைகேயி, பரதன் முடிசூட உபாயம் கேட்கிறாள். சம்பராசுர யுத்தத்தில் தயரதனுக்குத் தேர்ச்சாரதியாக இருந்தவள் கைகேயி. அப்போது ஆபத்தில் இருந்த தயரதனை மீட்டதற்கு அவன் அவளுக்கு இருவரம் நல்கியதனை நினைவு கூருகின்றாள் கூனி,*

வரத்தினில், ஒன்றினால்
அரசு கொண்டு, இராமன்
பெரு வனத்திடை ஏழ் இரு
பருவங்கள் பெயர்ந்து
திரிதரச் செய்தி, ஒன்றினால்
செழு நிலம் எல்லாம்
ஒருவழிப்படும் உன் மகற்கு;
உபாயம் ஈது என்றாள்

(ம.சூ. படலம் 90)

*கூனிக்கு பரதனுக்கு அரசு கிடைப்பதைவிட , இராமன் காடு செல்வதிலேயே நாட்டம் இருந்ததை இக்கூற்றுகளில் அறிய முடிகிறது.*

*இராமன் ஏன் காடு செல்ல வேண்டும் என்று கைகேயி கேட்கக் கூடும் என்று கருதி, இராமன் இங்கேயே இருந்தால் நாடு பரதன் வசப்படாது; ஆதலால் நாடு முழுவதும் பரதன் வசப்பட வேண்டுமாயின் இராமன் கோசலத்தில் இல்லாமல் இருப்பது தான் நல்லது என்று எடுத்துரைக்கின்றாள் கூனி இவ்வாறு,*

*கூனி செய்த சூழ்ச்சிக்கு இணங்கிய கைகேயியின் செயலால், இராமன் முடி புனைதல் தடைப்படுகின்றது. இராமன காடு புகுகின்றான்; இராவணன் வீழ்ச்சி வரை இச்சூழ்ச்சியின் தாக்கம் விரிந்து செல்வதை நாம் அறியலாம்.*

**சிலம்பு காட்டும் திருப்பு முனை நிகழ்வுகள்**

*முத்தமிழ் காப்பியமான சிலப்பதிகாரத்திலும், இளங்கோவடிகள் காப்பியத் திருப்புமுனை நிகழ்விற்கு*

கூனி பாத்திரத்தை முன் நிலைப்படுத்தி பயன்படுத்தி யுள்ளதை நாம் அறிய முடிகிறது. கடைத்தெருவில் ஒரு கூனியின் கையில் கொடுக்கப்பட்டிருந்த அந்த மாலையை விலைகொடுத்து வாங்கிய கோவலன் தன் மனையறம் மறந்து மாதவியின் மனையுள் புகுகின்றான். கோவலனின் இத் தன்மையை,

'வடுநீங்கு சிறப்பின் தன்
மனையகம் மறந்தேன்'

(சிலம்பு: 3:175)


என இளங்கோவடிகள் சுட்டிக் காட்டுகிறார். இவ்வாறு புகார் நகரத் தெருவில் கோவலன் கூனியின் கையில் விலை கொடுத்துப் பெற்ற ஒற்றை மாலை அவன் வாழ்வை திசைத் திருப்ப; அதில் இருந்து தெளிவந்தவனாக மாதவி பாடிய கானல் வரிபாட்டின் மூலம் தன்னை உணர்ந்து திரும்பும் நிலையும்; மதுரை மாநகரத் தெருவில் அவன் விற்ற ஒற்றைச் சிலம்பு கோவலனுக்கு ஓர் அவல முடிவைப் பெற்றுத் தரும் நிலையையும் காப்பியத்தின் திருப்பு முனைகளாக அமைவதனை இங்கு ஒப்பிடத்தக்கதாகும். மேலும், சூர்ப்பணைகை செய்யும் சூழ்ச்சியால் இராவணன் சீதையைக் கவர முடிவு செய்கிறான் (10153: 168 170); அதற்கு துணை செய்யுமாறு இராவணன் மாரீசனை வேண்டுகின்றான். அம்மாரீசன் இராம பாணத்தால் அடிப்பட்டு உயர்துறக்கும் நிலையிலும், இராமன் குரலைப் போல் பொய்க் குரல் எழுப்பி மண்ணில் சாய்கின்றான். இவனது மாய வேடமும் பொய்க்குரலும், சீதையை இராவணன் தூக்கிச் செல்லுவதற்கு வழிவகுக்கின்றன. இதே போன்று சிலம்பிலும் பொற்கால்லன் கூறும் பொய் உரையே கோவலனின் இறப்புக்கு காரணமாக அமைவதனை அறிய முடிகிறது.

இவ்வாறு கூனியும் கைகேயியும் சூர்ப்பணகையும் மாரீசனும் காப்பியத்தின் திருப்பு முனைகளாக ஆகின்றனர் என்பதை இக்கட்டுரையில் ஒவ்வொரு பாத்திரமும் உரிய இடத்தைப் பெற்று முதன்மைப் பாத்திரங்களின் முழுமைப் பண்புக்கு உறுதுணை செய்துள்ளமையையும், வாழ்க்கைத் தத்துவக் கூறுகளை இப்பாத்திரங்களை கொண்டு கம்பர் சிறப்பித்துள்ளமையை அறிய முடிகிறது.

✪

# கச்சத் தீவு!

ஆலந்தூர் மோகனரங்கன்




இந்நாட்டுச் சேதுபதி பெற்ற செல்வம்
இக்காலத் தமிழனுக்குப் பாட்டன் சொத்து!
எந்நாட்டில் இதுநடக்கும்? கச்சத் தீவை
இந்திரா காந்திதந்தார் ஈழத் துக்கே!
தன்வீட்டுச் சொத்தெடுத்துத் தாரா மல்இத்
தமிழரது சொத்தெடுத்துக் கொடுத்தா ரே!ஏன்?
முன்வீட்டில் நாயிருந்தால் குரைக்கும்! கள்ளன்
முகம்கண்ட தும்குதிக்கும்! குரல்கொ டுக்கும்!

கண்ணுள்ள முகமில்லை! காதும் இல்லை!
கற்றவர்கள் கடல்காற்று வாங்கி வந்தார்!
மண்ணுள்ள மரங்களையா குறைகள் சொல்வேன்?
வாய்திறந்த அழமாட்டாக் குழந்தை ஊமை!
புண்ணுள்ள இடத்தினிலே ஊசி பாய்ந்தும்
புலம்பாத அரைப்பிணங்கள் மிகுந்த நாடு!
பண்ணுள்ள பாட்டிசையைச் சிதைத்த போதும்
பார்த்திருப்பார் தமிழ்நாட்டுக் கோழை மக்கள்!

இன்றென்ன நிகழ்கிறது கச்சத் தீவில்?
ஈழத்தான் நடமாட்டம்! தமிழி னத்தான்
கன்றிழந்த பசுவானான்! கண்ணீர் ஊற்றுக்
காலெடுத்து நடக்கின்ற காட்சி தந்தான்!
என்றிந்த நிலைமாறும் என்று கேட்க
இன்றந்த கரிகாலன் இருக்கின் றானா?
கொன்றிந்த மீனவரைக் குவிக்கும் போதும்
கும்பிட்டே குனிந்திடுவோம் தில்லி நோக்கி!

இந்தஇனம் நாதியற்ற இனம்!அ டித்தும்
இழுத்துப்போய் உதைத்தாலும் கேட்பார் யாரோ?
எந்தஇனம் எழுந்தாலும் இலைகொ டிக்கும்
இருக்கின்ற அசைவின்றி நாமி ருப்போம்!
கந்தலுடை இல்லாமல் பட்டுச் சட்டை!
கறிசோறு! தழுவுகிற சின்ன குட்டி!
எந்தநிலை இருந்தாலும் இவைவே தேவை!
இந்நாளில் பெருந்தமிழர் வாழ்க்கைப் போக்கு!

# ட்ரீம் புக்ஸ் வர்ல்டு

**(Dream Books World),**

## புதிய புத்தகக் கடை திறப்பு



*அனைத்து புத்தக ஆர்வலர்களைக் கவரும் விதமாக, சென்னை அண்ணா சாலை, எல்ஐஸி கட்டிடத்திற்கு எதிரே, ட்ரீம் புக்ஸ் வர்ல்டு* (Dream Books World) *எனும் புதிய புத்தகக் கடை "நிஸ்ர போனான்ச" கட்டடத்தில் துவக்கப்பட்டது.*

*இப்புத்தக கடையினை, பிரபல திரைப்பட இயக்குனர், திரு. வசந்த் அவர்கள் திறந்து வைத்து குத்துவிளக்கு ஏற்றினார்.*

*இந்திய மற்றும் சர்வதேச பதிப்பாளர்களின் ஆங்கிலம் மற்றும் தமிழ் புத்தகங்கள் இங்கே கிடைக்கின்றன. மேலும் கல்லூரி புத்தகங்கள், பொது புத்தகங்கள், போட்டி தேர்வுக்கான புத்தகங்கள், சிறுவர் புத்தகங்கள் என பல்வகை புத்தகங்கள் இங்கே கிடைக்கின்றன.*

*திறப்பு விழா சிறப்பு சலுகையாக அனைத்து புத்தகங்களுக்கு 15% முதல் 60% வரை சிறப்பு தள்ளுபடியாக வரும் 30, செப்டம்பர் 2017 வரை வழங்கப்படுகிறது.*

*திறப்பு விழாவின் போது ட்ரீம் புக்ஸ் வர்ல்டு* (Dream Books World) *புத்தகக் கடை உரிமையாளர் திரு கே. ரவி அவர்கள் அனைவரையும் வரவேற்றார்.*

**தொடர்புக்கு : திரு கே. ரவி, உரிமையாளர்,**
**ட்ரீம் புக்ஸ் வர்ல்டு | +91 9840617939**
**செய்தி தொடர்பு : விஷ்ணுராம் | +91 98412 55885**

## மெய்யப்பன் அறக்கட்டளை விருது




தமிழ்ப் பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் இ. சுந்தரமூர்த்தி அவர்கள் முல்லைப் பதிப்பகத்திற்கு விருது வழங்குகிறார். (மெய்யப்பன் அறக்கட்டளை ஆண்டுதோறும் வழங்கும் சிறந்த பதிப்பத்தினர்களுக்கான விருது) 21.06.2017


## தொலைக்காட்சிகளில் திறமையை வெளிப்படுத்த வாய்ப்பு

தொலைக்காட்சி நிகழ்ச்சிகளில் விவாதங்களில் பங்கேற்கலாம். டாக்டர்கள், பெண் தொழில் முனைவோர், சாதனையாளர்கள், தொலைக்காட்சி தொடர்களில் நடிக்க விரும்பும் நடிகர், நடிகை, துணை நடிகர்களுக்கு வாய்ப்பு பெற்றுத்தரப்படும்,

**செல்: 7448409069**

*suryapublicity2000@gmail.com*


Owned Published and Printed by P.Sangamithirai Published from 43/13, Paddy field Road, Perambur, Chennai - 600 011, Printed at J.M. Process, 22/49, Subedar Hussain Street, Border Thottam, Royapettah, Chennai - 600 014. **Editor : Dr. M.Pattazhagan**